

# நினைவலைகள்



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும்
புங்குடுதீவையும், நந்தாவில்அம்மன் கோவிலடி கொக்குவிலை
வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் செல்லத்துரை தர்மபாலன்

அவர்களின்

நினைவுகள் சுமந்து வரும் நினைவேந்தல் ஏடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**29.04.2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்போடு அறிவும் தந்து
பண்போடு பாசம் வைத்து
எங்களின் வாழ்க்கைக்காய்'
தன்னையே ஊன்றி
ஒளிதந்த எங்கள்
ஆருயிர்த் தந்தையின்
இனிய நினைவுகளை
இதயங்களில் சுமந்து அவர்கள்
தூய ஆத்மா
புங்குடுதீவு குறிகட்டுவான் பேச்சி அம்மனின்
திருப்பாதகமலங்களில் நித்திய சாந்தி பெற்றிட
"நினைவலைகள்" எனும்
இவ் ஏட்டினை அவர்
பாதக்கமலங்களுக்கு
சமர்ப்பணம் செய்கிறோம்.

–சுபம்–

– குடும்பத்தினர் –






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# அமரர்

# திரு. செல்லத்துரை தர்மபாலன்

அவர்களின்

தோற்றம்
05.10.1948

மறைவு
30.03.2011

## திதி வெண்பா

சீர் பொலிந்த விரோதியாண்டு பங்குனித் திங்கள் முப்பதாம் நாள்
அபரபக்க ஏகாதசி திதி தன்னில் – தர்மவான்
தயாளன் மாதா என்றே மகிழ்வாய் அழைக்கும் தர்மபாலன்
தரணி விட்டே ஏகினான் பேச்சி அம்மன் திருவடி நிழலில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## விநாயகர் துதி



### விநாயகர் துதி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலம் உறையிறையே.



## நாகபூசணி அம்மன் தோத்திரம்

(நயினை க.இராமச்சந்திரா)

எனக்கென்றோர் தனிவரம்யான் கேட்கவில்லை
என் இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை யான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகிறேன்
தனக்கொருவரொப்பில்லாத் தாயே இந்தத்
தரணியிலே சாந்தியையே தருவாய் நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

**முதலாந் திருமுறை – திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது**

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குண்றுடையானைக் கூற என்னுள்ளங் குளிரும்மே

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர்கொள் செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தி யாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் திருமுறை – திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது!

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருவால வாயான் திருநீறே

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல்லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

எந்தை யீசனெம் பெருமாள்றேமர்
கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற்
சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புனல்
நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலைநெல்
வாயில் லரத்துறை யடிகள் தம் அருளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

மண்ணில்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல்ல கதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணிநல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணிநல் லாளொடும் பெருந்தகை இருந்ததே

மானினோர் விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவன் என்று நீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய இடங்களிற் பல அல்லல் சேர்
ஈனர்கட்கெளி யேனலேன் திரு ஆலவாயரன் நிற்கவே

வீடலால வாயிலாய் விழவியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பாவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் காவிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாவிதன்ன கொள்கையே

எந்தமது சிந்தை பிரியாத பெருமானென இறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்வளர் தூபமொடு தீபமலி வாய்மை அதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சண்பைநகரே

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூர
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிரா நோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாலாந் திருமுறை – திருநாவுக்கரசு நாயனார் அருளியது**

திருச்சிற்றம்பலம்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
பிரியா துவணங் குவன்எப் பொழுதும்
தொற்றா தென்வயிற் றின் அகம் படியே
குடரோ டுதடக் கிமுடக் கியிட
ஆற்றேன் அடி யேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.

தலையே நீவணங்காய் – தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

முத்துவிதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டைலைமாலை விரதிகள்
அத்தன் ஆ ரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நீழலே

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கும் மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே

அரும்பாற் றப்பட ஆய்மலர் கொண்டு நீர்
கரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற் றப்புலி யூரெம் பிரானையே

அரிச்சுற் றவினை யாலடர்ப் புண்டு நீர்
எரிச்சுற் றக்கிடந் தாரென் றயலவர்
கிரிச்சுற் றுப்பல பேசப்ப டாமுனம்
திருச்சிற் றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு
## அமரர் - செல்லத்துரை - தர்மபாலன்

அன்னைமடியில் : 1948-10-05

ஆண்டவன் அடியில் : 2011-03-30

இயற்கை எழிலொடு ஏற்றமிகு நல்வனமும் – நாற்புறமும்
கடல் சூழ்ந்த இலங்காபுரியின் மணிமுடியாம் யாழ்.மண்ணின்
தீவகத்தின் திலக மென்றும், தென்னையுடன், பனைவளமும்
பணப்பயிராம் புகையிலை யும், பரந்த வயல்வெளியும்
கற்றவரும், கலைஞர்களும், கவினுறு ஆலயங்களுடன்
பொன் கொழிக்கும் தீவாம் புங்குடுதீவினை
சொந்த மண்ணாய் கொண்டவரும் – யாழ். மண்ணில்
பேர்போற்றவாழ்ந்த செல்வந்தன் செல்லத்துரைக்கும்
சொந்த மைத்துனியாய் மனைவி யாய் அமைந்த
நல்லாள் தனம் நிறைந்த தனலெட்சிமிக்கும்
தர்மவான், தயாள குணத்தோன், தரணி போற்றும்
தர்மபாலன் தரணியில் பிறந்தான்–கூடவே
தங்கமான தங்கரத்தினமும், தேவன் என்ற தேவராசாவும்
கருத்தினில் இனியவள் கலாநிதியும்
தனவான், தனபாலனுடனே கண்ணுக்கினிய கமலாம் பிகையும்
கடைக்குட்டியாக அமரர் விக்னேஸ் வரனும்
கூடவே பிறந்த சகோதரர் அன்றோ,
கடமையில் சிறந்த தர்மபாலனும் பரமேஸ்வராக்கல்லூரியில்
பள்ளிப்படிபைப் படித்தே முடித்து பக்குவமான
சாரதியாகவும் "கிருஸ்ணபவன்" தொழிலகத்தின்
பங்காளராகவும், குறிகட்டுவானில்
குறைதீர்த்துவைக்கும் குலதெய்வம் மனோன்மணி அம்மனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ன தான சபையின் உப செயலாளராகவும் புங்குடுதீவு மினி பஸ்
தலைவராகவும் சிறப்பாய் திகழ்ந்து களிப்பாய் வாழ்ந்தார்.
கல்யாணப்பேச்சினை தொடங்கிய வேளை
புங்குடுதீவில் பெருமையாய் வாழ்ந்த
கிளார்க்கர் ஐயா துரைச்சாமிக்கும்
கள்ளமில்லா கனகமணிக்கும் முந்தித்தவத்தால்
முன்பிறந்த மகளாம் மனோன்மணிக்கு
விவாகப் பொருத்தம் நன்றாய் அமைய
விமரிசையாக நடந்தது திருமணம்.
இருவரும் இணைந்த இல்லற வாழ்வின் எச்சங்களாக
கருணை உள்ளத்தாள் கல்பனாவுடனே
மாசில்லா மதுமதியும், தனிமகனாக ஜெயப்பிரதாப்பையும்
மக்களாய் பெற்றே மகிழ்ந்தார் அமரர்.
பெற்ற பிள்ளைகள் பெருமையாய் வாழ வழி அமைத்தே
கனடா சென்று ஐயிரண்டு ஆண்டு
அசையாமல் உழைத்தார்.
கால ஓட்டம் மாறிய வேளையில் தாய் நாடு திரும்பி
தர்மபாலனும் தன்குடும்பத்தோடு வாழும்வேளை
அருமை மகளாம் கல்பனாவும் கல்யாண வயது கண்டேக
புங்குடுதீவு மைந்தன் கொலண்ட் நாட்டில்
சிறப்பாய் வாழ்ந்த சிவகுமாரிற்கு திருமணம் முடித்து
சீமைக்கு அனுப்பி சாதனா என்ற பேர்த்தியையும் பெற்றே
பெருமையாய் வாழ்ந்தார்–சாதனா குரலை
கணீர் என்ற தொலைபேசி அழைப்பில் கேட்டே மகிழ்ந்தார்
அமரர் வாழ்வில் கணேசானந்தனுடன்
கள்ளமில்லா கமலா தேவியும், வெள்ளையுள்ளம் கொண்ட
வெள்ளையர் என்ற ஜெயசேனனும்
கலாநிதியுடன் இங்கிதம் நிறைந்த இராசதுரையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துன, மைத்துனியாய் கண்டே களித்தார்.

சீமையில் வாழும் சிவகுமார் , சிறப்பான சிவராசாவும்

சிவபாலனுடனே, சிவலிங்கமும், அருமையான

சகுந்தலா தேவியையும் மனைவிவழியில் மைத்துனர்

மைத்துனிகளாய் பெற்றே மகிழ்ந்தார்.

கடல் கடந்து வாழும் துரைநாதன், தேவஞானி

பாஸ்கரன், கிசா, சசிரேகாவுடனே குருபிரசாத்

கோசல்யாவுக்கும் தாய்மாமனாக

தரணியில் திகழ்ந்தார்.

லக்சன், அச்சதன் இருவர்க்கும்

பேரினிய பெரியப்பாவானார்.

சகலனாக மகேந்திரனை யும்–மனைவிவழியில்

சகோதர உறவாய் செல்வி, ஜெயா, ராசி

மூவரைக் கண்டே மகிழ்ந்தார்.

குறை ஒன்றும் இன்றி நிறைவாய் வாழ்ந்த அமரர்

சடுதியாய் வந்த நோயினாலே துவண்டே போனார்

வைத்திய சாலையை வெறுத்த அமரர்

வைத்தியம் பெற்றே வந்தார் அங்கு

வேளையும் விதியும் நெருங்கிய வேளையில்

வைத்தியம் எல்லாம் பலனின்றிப் போகவே

பங்குனித் திங்கள் முப்பதாம் நாள்

ஏற்றம் மிகுந்த ஏகாதசி திதியில்

பேச்சி அம்மன் திருவடி நிழலை அடைந்தார்

அமரர் தர்மபாலன்

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை என்ற விளக்கு

மஹாராஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை என்ற விளக்கு

மனிதனுக்கு கணக்கற்ற அன்பளிப்பும், ஆசிர்வாதமும் கிடைத் துள்ளன. படைப்பாளரின் எல்லாவற்றிலும் சிறந்த அன்பளிப்பு இந்த வாழ்க்கை என்பதில் சந்தேகமில்லை. ஒரு வேற்றுணர்வும் இல்லாமல், ஜாதி–மதம் பார்க்காமல், இந்த உலகத்தின் ஒவ்வொரு மனிதனுக்கும் மூச்சு என்ற எல்லையற்ற அருள், மழையாக பொழி கிறது.நமது உண்மை உருவத்தை அறிமுகம் செய்விக்க நம் இதயத்தில் வீற்றிருக்கும் பரமானந்தத்தின் அனுப வம் செய்விக்க, அதன் தொடர்பு கிடைத்து ஒவ்வொரு நொடியும் பேரின்பமும், பரம–சாந்தியும் அனுபவம் செய்விக்க, நமக்கு அந்த ஞானவழிமுறை அவசியம்.

பிரேம் ராவத் மஹாராஜி கடந்த 40 வருஷங்களாக உலகத்தின் மக்களுக்கு இந்த ஞானப்பார்வை அளிக்கும் தொண்டை செய்து வருகிறார். உலகத்தின் கோடிக்கணக்கான மக்களுக்கு அன்பு, சாந்தியின் செய்தி கிடைக்கச்செய்ய, ஒவ்வொரு வருஷமும் செய்யும் பயணத்தின் தூரம், உலகத்தை ஐந்து தடவை சுற்று வதற்கு சமமாகும்.

அவருடைய அன்பு, சாந்தியின் செய்தி முழு மனிதப்பிறவிக்கு ஆகும் மஹாராஜி, இன்பமும், துக்கமும் வாழ்க்கையின் இரண்டு பக்கங்கள், ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் இன்பம் விரும்பு கிறான், ஆனந்தம் விரும்புகிறார். அவன் தன் இதயத்தில் வீற்றி ருக்கும் ஆனந்தத்தின் பொக்கிஷம் வரை அடைந்தால் அவனு டைய முழு அவநம்பிக்கையும் நம்பிக்கையாக மாறமுடியும்.

இந்தப் புத்தகத்தில் சேர்க்கப்பட்ட செய்தி உங்களுடைய ஆர்வ முள்ள இதயத்தில் அப்படிப்பட்ட விளக்கின் ஒளி உண்டாகும். அதைக்கொண்டு உங்களுடைய உண்மை குறிக்கோள் நோக்கி விழிப்புணர்வுடன், நீங் கள் உங்கள் வாழ்க்கையில் வெற்றியடையமுடியும்.

*மஹாராஜி*

 29.04.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்கை என்பது என்ன?

இவ்வுலகில் மனிதன் பிறக்கிறான். பிறகு ஒரு நாள் இவ்வுலகைவிட்டுச் செல்லவேண்டியதுதான். இது தாக்கத்திற்கோ, ஆலோசனைக்கோ ஆன விஷயமும் அல்ல இது புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள விஷயமும் அல்ல. பெரிய ஞானியோ, அஞ்ஞானியோ, எல்லோருக்கும் பெரிய ஞானியோ, அஞ்ஞானியோ, பணக்காரனோ, ஏழையோ, படித்தவனோ, படிக்காத வனோ, மகானோ, பாவியோ எல்லோரும் செல்ல வேண்டியவர்களே. இதை யாராலும் மாற்றமுடியாது. இவ்வுலகிற்கு வந்தவர்கள் ஏதோ ஒரு நாள் இவ்வுலகை விட்டுச் செல்வார்கள் என்ற நியதி, இந்த சிருஷ்டி படைக்கப்பட்டது முதல் உள்ளது.

எல்லோரும் இவ்வுலகைவிட்டுச் செல்லத்தான் வேண்டுமென்றால், மனிதனுக்கு என்ன மிஞ்சுகிறது? எந்தப் பொருள் பாக்கியுள்ளது? ஒரு பொருள்–அதுதான் வாழ்க்கை என்பது. அது என்ன? ஒரு பக்கம் பிறப்பு, மறு பக்கம் இறப்பு. இவைகளின் இடையில் இருக்கும் நேரம்தான் வாழ்கை என்பது. பிறப்பு – இறப்புக்கிடையில் வாழ்க்கையில் மனிதனுக்கு எல்லாவற்றிலும் சிறந்தது எது? வாழ்வில் பல விஷயங்கள் நடந்தவண்ணம் இருக்கின்றன. ஆனால் எல்லாவற்றிலும் முக்கியமான விஷயம், நிரந்தரமாக இயங்கிக் கொண்டிருக்கும் அவன் மூச்சுதான்! இந்த மூச்சு இயங்கும் வரை அவன் உயிர் வாழ்கின்றான். இந்த மூச்சை இயங்குகிறவர் யார்? யோசிக்கவேண்டிய விஷயம்.

உலகில் மக்கள் தங்களுள் இருக்கும் வேறுபாடுகளையே பார்க்கின்றார்கள். நீங்கள் அந்த மதத்தவர், நாங்கள் இந்த மதத்தைச் சார்ந்தவர். நீங்கள் இந்த நாட்டவர், நாங்கள் அந்த நாட்டைச் சேர்ந்தவர். ஆனால், இவ்வுலகில் எல்லோரும் ஒரே மாதித்தான் பிறக்கின்றார்கள். இந்துக்கள் ஒரு தனிப்பட்ட முறையிலோ, கிறிஸ்தவர்கள் மற்றொரு விதத்திலோ பிறப்பதில்லை. யார் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே மாதிரித்தான் இவ்வுலகிற்கு வருகிறார்கள், இவ்வுலகைவிட்டுச் செல் கிறார்கள்.

அடிப்படையானது இந்த மூச்சுதான். அப்படி என்ன பெரிய விஷயம் என்று நினைக்கிறார்கள். ஒரு குழந்தை பிறக்கும் பொழுது அந்த குறிப்பிட்ட சிறிது நேரத்திற்கு, அந்த அறையில் உள்ள ஒவ்வொருவரும் மௌன மாகவும், அமைதியாகவும் இருக்கிறார்கள். அந்தத் தருணத்தில் யார் கவனமும் அது ஆணா, பெண்ணா என்பதில் இருப்பதில்லை. ஒவ் வொரு வருடைய கவனமும், குழந்தை மூச்சு விடுகிறதா, இல்லையா, உயிருடன் இருக்கிறதா என்பதில் நிலைத்திருக்கிறது. மூச்சு இயங்கிக்கொண்டிருப் பதுதான் உயிர் வாழ்வதன் அறிகுறியாகும்.

மருத்துவ மனைகளில் பிரெயின் வேவ், ஹார்ட் வேவ் காண்பிக்கும் பெரிய, பெரிய கருவிகள் இருக்கின்றன. கடைசி கணங்களில் டாக்டர் கள் பரிசோதிக்க அந்த மின்சாரக் கருவிகளை இயக்கிப் பார்க்கின்றார் கள். பிறகு மனிதனின் இதயம் துடிக்கிறதா என்று பார்க்கின்றார்கள். பிறகு கடைசியாக மனிதன் மூச்சு இயங்கிக்கொண்டிருக்கிறதா என்று பார்க் கிறார்கள், அல்லவா?

இந்த மூச்சு உண்மையில் எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் என்பதை நாம் மறந்துவிடுகிறோம். மனிதன் மேல் எவ்வளவு கருணையுடன் அளிக்கப் பட்டுள்ளது – இந்த வாழ்வு, இந்த மனித உடல், ஒவ்வொரு கணமும் எந்த முயற்சியும் செய்யாமலே, அவனுள் இயங்கிக்கொண்டிருக்கும் இந்த மூச்சு. மூச்சுவிடுவது மனிதனின் கட்டுப்பாட்டில் இருந்திருந்தால் ஒரு வேளை மனிதன் மூச்சுவிட மறந்துவிடலாம்! கடைசி காலத்தில் ஒவ் வொரு மூச்சிற்கும் போராடும் பொழுதுதான் அதன் அருமை தெரிகிறது. மனிதன் பணக்காரனோ, ஏழையோ, உயிர் மெல்ல மெல்ல உடலை விட்டு பிரியும் பொழுது, எந்த மூச்சை அவன் ஒவ்வொரு கணமும் விட்டுக் கொண்டிருந்தானோ, எதைப் பற்றி வாழ்வில் ஒரு கணம் சிந்திக்கக் கூட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையோ, அது மேலும் ஒன்று கிடைக்குமா? என்று ஏங்குகிறான். மனிதன் தன் பலம் முழுவதையும் செலுத்தி ஒவ்வொரு மூச்சையும் விட முயற்சிக்கிறான். அன்றே அவனுக்கு இந்த மூச்சின் மதிப்புத் தெரிகிறது. இது கடவுளின் அருள். தானே வருகிறது – செல்கிறது. மனிதனுக்கு மறுமுறை தன்னுடன் ஒருபோதும் கிடைக்கமுடியாத அந்தத் தருணத்தை விட்டுச் செல்கிறது.

மக்கள் தங்கள் படிப்பு–பட்டங்கள் பற்றி கர்வமடைகிறார்கள். தங்கள் சான்றிதழ்களை சுவர்களில் பிரேம் போட்டு மாட்டிக்கொள்கிறார்கள். விஷயம் என்னவென்றால் உங்களுக்கு மேலும் ஒரு சான்றிதழ் கிடைக்கும். அதை எங்கேயும் மாட்டமுடியாது. அதுதான் டெத் ஸர்டிஃபிகேட் டாக்டர் அளிப்பது. உங்கள் மூச்சு இயங்கவில்லை என்று பார்த்தபிறகு கொடுப்பார். அந்த சான்றிதழால் உங்களுக்கு எந்தப் பயனுமில்லை.

எத்தனை பேர் இதைப் பற்றி சிந்திக்கிறார்கள்? ஒவ்வொரு நாளாக நம் வாழ்வு கழிந்து கொண்டிருக்கிறது. நாம் உயிருடன் இருப்பதன் அருமையை புரிந்து கொண்டுள்ளோம்? நம் ஒவ்வொரு மூச்சினுள்ளும் அளவிடமுடியாத ஆனந்தம் நிறைந்துள்ளது. அதை நாம் உயிருள்ள பொழுதே அடையமுடியும் என்பதை நாம் அறிவோமா? நம் வாழ்வில் நம் இதயக் கோப்பையை முழுவதுமாக நிரப்பிக்கொள்ளும் அந்த நேரம் எப்பொழுது வரும்? ஏனென்றால், நம் வாழ்வு ஒவ்வொரு கணமாகக் கழிந்து கொண்டிருக்கிறது. ஆனால், ஆனந்தம் பெறவேண்டிய நம் விருப்பம் இப்பொழுதும் முன்போலவே அப்படியே நிலைத்திருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை எனும் ரயில்பயணம்

இந்த வாழ்க்கை என்ற ரயில்வண்டி ஒரு பொழுதும் நிற்காத ஒரு அற்புத மான வண்டி. நிரந்தரமாக ஓடிக்கொண்டேயிருக்கிறது. இதில் பயணிகள் ஏறிக்கொண்டும், இறங்கிக்கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் இது பயணிகளுக்காக நிற்பதில்லை. ஒவ்வொரு வினாடியிலும் அநேகமாக 4 பயணிகள் ஏறுகிறார்கள், இரண்டு பேர் இறங்கிவிடுகிறார்கள். அதா வது இவ்வுலகத்தில் ஒரு வினாடியில் நான்கு மனிதர்கள் பிறக்கிறார்கள், இருவர் இறந்து போகிறார்கள். இந்த ரயில் வண்டி எங்கேயும் நிற்காது என்பதால், இதில் ஏறினால் ஏறியதுதான், இறங்கினால் இறங்கியதுதான். உங்கள் இலக்கு எது? இந்த வண்டி எங்கே சென்று அடையும்? இரவு–பகல் ஓடிக்கொண்டிருந்தாலும் செல்வது எங்கேயுமில்லை!

அற்புதமான இந்த ரயில்வண்டியில் பயணிகள் அமர்ந்திருக்கிறார்கள். பலரும் பலவித வேலைகளைச் செய்துகொண்டும், பலவிதமாக நினைத் துக்கொண்டும் இருக்கிறார்கள். பயணிகள் எல்லோரும் எங்கோ செல் லப்போவதுபோல தங்கள் பெட்டி படுக்கைகளை கட்டி வைத்துக்கொண் டிருக்கிறார்கள். ஆனால் செல்ல வேண்டிய இடத்தில் இவைகளுக்குத் தேவை இருக்காது. பெட்டி, படுக்கைகளைத் தலையில் வைத்துக் கொண்டு, இவை எங்களுடையது. எங்களுக்கு இவை தேவை என்கின்றனர். பயணி கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிறார்கள், நீங்கள் எங்கே செல் கிறீர்கள்? எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்? எந்த வழியாக வந்தீர்கள் எப்படியிருந்தது? எப்படிப்பட்டது? நான் எங்கிருந்து வந்தேனா அது மிக வும் அழகான இடம். நான் செல்லப்போகும் இடமும் மிக அழகானது. ஆனால், எங்கே சென்றுகொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் யார்? இந்த வாழ்க்கைப் பயணம் என்பது என்ன?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எல்லேரும் இந்த வாழ்க்கை ரயில்வண்டியில் அமர்ந்துள்ளோம். இது இடைவிடாது ஓடிக்கொணடிருக்கிறது. ரயில்வண்டியில் அமர்ந்திருப்ப தாகவோ பயணிப்பதுபோலவோ நீங்கள் உணரவில்லையா? அதற்கு ஒரு நிரூபணம் உள்ளது. உங்கள் மூச்சை கவனியுங்கள். அது ஓடிக் கொண்டிருக்கிறது. உங்கள் பயணத்தின் எல்லாவற்றையும் விட முக்கிய மான பாகம் இதுதான். இந்த மூச்சை வீணாகக் கழிக்காதீர்கள். படைப் பாளர் இந்த மூச்சை இலவசமாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். அத னால் இதற்கு ஏதும் மதிப்பில்லை என்று அர்த்தமில்லை. இந்த மூச்சு இல வசமாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். அதனால் இதற்கு ஏதும் மதிப் பில்லை என்று அர்த்தமில்லை. இந்த மூச்சு இலவசம் என்பதன் காரணம், இதன் விலையை யாராலும் கொடுக்க முடியாது என்பதுதான். இவ்வுல கில் எவ்வளவுதான் பணமிருந்தாலும், இந்த மூச்சை விலைக்கு வாங்க முடியாது. பெரிய கொடையாளியாக இருந்தாலும், இந்த மூச்சை யாருக் கும் தானமாகக் கொடுக்க முடியாது. யாராக இருந்தாலும், இதை பங்கிட வும் முடியாது. வந்து – செல்லும் இந்த மூச்சுதான் இறைவன் உங்கள் மேல் காட்டும் கருணை. ஒவ்வொரு கணமும் உங்களால் புரிந்துகொள்ள முடிய வில்லை. பயணத்தில் தங்களையே இழந்து கொண்டிருக்கிறீர்கள். இங் கேயும் அங்கேயும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், தங்களுள்ளே பார்த் துக்கொள்வதில்லை.

செல்லும் அந்த மூச்சு ஒரு பொழுதும் திரும்பிவராது. இன்று எவ்வளவு மூச்சு எடுத்தீர்கள் என்று கணக்கு வைத்திருக்கிறீர்களா? காலை முதல் இன்று எவ்வளவு மூச்சு விட்டீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? மூச்சு எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம். யாராவது தெரிந்தவர் களை சந்தித்தால், அல்லது துக்கம் கண்ணைச் சுற்ற இதை மறந்துவிடு கிறோம். மறக்கக்கூடாத ஒரு விஷயம் இதுதான். மற்ற பொருள்களை எல்லாம் நீங்கள் கொடுக்கவும் முடியும், எடுத்துக்கொள்ளவும் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், இது அப்படிப்பட்டப் பொருள் இதை வேறு ஒருவர் உங்களுக்குக் கொடுக்கவோ அல்லது உங்களிடமிருந்து எடுத்துக்கொள்ளவோ முடியாது. கொடுப்பவர் கொடுத்துக்கொண்டிருக்கிறார்,

ஏற்றுக்கொள்ளுங்கள். என்ன செய்தாலும் சரி, வாழ்வை வளம்பெற செய்யுங்கள். பயணம் தொடர்ந்துகொண்டிருக்கிறது. ஒரு நாள் இந்த மூச்சு வந்து–செல்வது நின்றுவிடும். இதுதான் வாய்ப்பு. என்று இந்த மூச்சு இயங்குவது நிற்குமோ அன்று நீங்களும் முடிந்துவிடுவீர்கள். நீங்கள் பெரிய, பெரிய திட்டங்களைத் தீட்டுகிறீர்கள். ஆனால் இந்த வாழ்க்கை என்னும் ரயில் பயணத்திற்கு ஏதாவது திட்டம் போட்டிருக்கிறீர்களா?

இந்த மூச்சை இலவசமாக இருப்பதற்குக் காரணம், இதற்கான விலையை ஒருவராலும் கொடுக்க முடியாது. உலகத்தில் எவ்வளவு செல்வம் இருப்பினும் இந்த மூச்சை வாங்க முடியாது. எவ்வளவு பெரிய கொடையாளியாக இருப்பினும், இந்த மூச்சை ஒருவருக்கும் தானம் செய்ய முடியாது. யாரும் இதை பங்கிடமுடியாது. வந்து – செல்லும் இந்த மூச்சே, உங்கள் மேல் கடவுளின் அருளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனந்தத்திற்கான விருப்பம்

இவ்வுலகில் நாம் எல்லோரும் ஆனந்தத்தை விரும்புகிறோம். வாழ்க்கையில் நமக்கு ஆனந்தம் எப்படிக் கிடைக்கமுடியும் என்று உலகம் சொல்லிக்கொடுக்கின்றது. நமக்கு இது பிடிக்கும் அதில் விருப்பம் என்றும் உலகம் சொல்லிக்கொடுக்கிறது. ஆனால், நாம் நமது விருப்பம் என்ன என்று நம்மிடமே கேட்டுக்கொள்வதே இல்லை. மெல்ல–மெல்ல நேரம் கழிந்து கொண்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். கண்களும் சரியாகத் தெரிய வில்லை, காதும் சரியாகக் கேட்பதில்லை. நம் வேலைகளை எல்லாம் செய்ய எந்த உடலை எதிர்பார்த்தமோ, அதுவும் ஒத்துழைக்க மறக்கத் தொடங்குகிறது. அந்த நேரமும் வருகிறது – கடைசி மூச்சும் கைவிடத் தொடங்குகிறது. அந்த நேரத்தில் கூட நாம் நமக்கு என்ன தேவை என்ற கேள்வியை கேட்டுக்கொள்வதில்லை. என் இயதத்தின் வேண்டுகோள் என்ன, விருப்பம் என்ன? நான் என் வாழ்வின் பயனை எப்படிப்பெறு வேன்?

மனிதப்பிறவி, அந்தப் படைப்பாளரின் விலைமதிக்க முடியாத கொடுப்பினை. இவ்வுலகில் படைப்பாளர் மனிதனுக்கு அன்பளிப்பாக நிறைய கொடுத்திருக்கிறார். ஆனால் கண்களால் நாம் எதைப் பார்க்கிறோம், என்பது நம்மைப் பொறுத்தது. கண்களால் அழகானவைகளையும், மோசமானவைகளையும் நாம் பார்க்க முடியும். கேட்பதற்காக காதுகளைக் கொடுத்திருக்கிறார்.

ஆனால் அவைகளால் எதைக் கேட்கிறோம் என்பது நம்மைப் பொறுத்தது. கால்களால் நடக்கமுடியும். ஆனால் நடந்து எங்கே செல்கிறோம் என்பது நம்மைப் பொறுத்தது. இந்த உடலில் மூச்சு வந்து செல்கிற ஒவ்வொரு நாளும் திரும்ப வாய்ப்புக்கிடைக்கிறது. ஒவ்வொரு நாளாக இறைவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு வாய்ப்பு அளித்துக்கொண்டிருக்கிறார். அந்த வாய்ப்பை எடுத்துக் கொள்வது நம் பொறுப்பு.

ஒரு பிரசித்தமான கதை உண்டு ஒரு ஏழை சலவைத் தொழிலாளி இருந் தான். ஒருநாள் தங்கமழை பொழிந்தது. அன்று அவன் வீட்டில் இருந்தான் வீட்டில் எங்கே பார்த்தாலும் தங்கமழைப் பொழிவதைப் பார்த்தான். வீட் டில் தங்கமழை என்றால் படித்துறையிலும் பெய்யும் என்று யோசித்தான். என் வீட்டில் அந்நியன் ஒருவனும் வரமாட்டான். ஆனால் படித்தரையில் பலரும் வருவார்கள். அதனால் நான் முதலில் அங்கே சென்று தங்கம் எடுக்கிறேன்; அதன் பிறகு வீட்டில் இருப்பதை சாவகாசமாகத் திரட்டிக் கொள்வேன். இந்த எண்ணத்துடன் படித்துறைக்குச் சென்றான். இவன் அங்கு செல்வதற்குள் அங்கிருந்தவர்கள் எல்லா தங்கத்தையும் எடுத்துக் கொண்டுவிட்டார்கள். அவன் பரவாயில்லை; என் வீட்டிலும் தங்கமழை பெய்திருக்கிறது, என்று நினைத்து வீட்டிற்கு வர, அங்கேயும் எல்லோ ரும் தங்கத்தை எடுத்து விட்டார்கள். அதனால் இந்தப் பழமொழி, இருப் பதை விட்டு பறப்பதைப் பிடிப்பது சலவைத் தொழிலாளி, வாய்ப்பு கிடைத் ததும் பலன் அடையவில்லை. நமக்கும் இவ்விதம் நடந்துவிடக் கூடாது. நமது ஒவ்வொரு மூச்சிலும் ஆனந்தம் என்ற விலை மதிக்க முடியாத பொக்கிஷம் நிறைந்துள்ளது. இது படைப்பாளர் மனிதனுக்கு அளித்த அன் பளிப்பு. ஆனால் நாம் அறியாமையால் அதை ஏற்றுக்கொள்வதில்லை. உலகின் மற்ற விஷயங்களிலிருந்து அதைப் பெற மயற்சிக்கிறோம்.

ஒரு முறை ஒரு மனிதனின் ஜாதகத்தைப் பார்த்து, அதை வைத்து கூறினார், சென்ற பிறவியில் அவர் யானையாக இருந்தார், வரும் பிறவியில் அவர் ஒரு பணக்கார வீட்டில் பெண்ணாகப் பிறப்பார். அது மிகவும் ஆச் சர்யமான விஷயமாக இருந்தது. உலகமும், நீங்கள் சென்ற பிறவியில் என்னவாக இருந்தீர், வரும் பிறவியில் என்னவாக இருப்பீர்கள் என்று கூறுகிறது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற பிறவியில் நீங்கள் யானையாக இருந்தீர்கள் என்றால், யோசியுங்கள், என்ன அர்த்தம்? உங்கள் மனைவி உங்களுக்கு உணவு வைத்தால், மூக்கால் உண்ண முயற்சிப்பீர்களா? ஒரு அர்த்தமும் இல்லை. உண்மையில் அவர் கூறவேண்டியது, இந்தப் பிறவியில் ஆனந்தம் அனுபவிப்பது எப்படி, இந்தப்பிறவியில் நீங்கள் யார், எப்படி இந்த வாழ்வு பயனடையும்?

எல்லோருடைய இதயத்துள்ளும் இன்பம், சாந்தியை நோக்கி அழைத்துச் செல்லக் கூடிய ஒரு பொருள் உண்மையில் வீற்றிருக்கிறதா? இது உண்மை என்றால் இவ்வுலகில் நாம் என்ன செய்தாலும், நம் இதயம் திருப்தி அடையாதவரை எந்தலாபமும் இல்லை. ஒரு எளிமையான உதாரணம். காலணியில் கல் இருக்கிறது என்றால், கால் வலி நீங்க நமக்கு எத்தனை மருந்துகள் சாப்பிட வேண்டும்? எத்தனை டாக்டர்களிடம் செல்ல வேண்டும்? கல் இருப்பதால்தானே காலில் வலி. அதனால் எவ்வளவு டாக்டர்களிடம் சென்று, எவ்வளவு மருந்துகள் சாப்பிட்டாலும், காலணியிலிருந்து கல்லை நீக்காதவரை வலி போகாது. நமது செயல்களும் இப்படித்தான் நடக்கிறது. நாமும் நமது வாழ்வில் பெரிய–பெரிய கற்களைப் போட்டு வைத்திருக்கிறோம், இதயத்தின் விஷயத்தை யாரும் கேட்பதில்லை.

மனிதனுக்கு இதயத்தின் அவசியமிருப்பதால், கடவுள் அதை அளித்திருக்கிறார். மனிதனால் எல்லாவற்றையுமே புத்தியால் பிடிக்க முடிந்திருந்தால் இதயத்திற்கு அவசியமே இருந்திருக்காது. அதனால்தான் இதயம் கொடுத்திருக்கிறார். புத்தியால் பிடிக்க முடியாத, ஆனால் இதயத்தால் பிடிக்கக் கூடிய அந்தப் பொருள் எது? ஒரு பொருள் மட்டும்தான். அதுதான் பரமானந்தம். கார் ஓட்டுவத எப்படி என்பதை இதயம் கற்றுத்தர முடியாது, அதற்கு புத்தி அவசியம். ஆனால் பேரின்பத்தை புத்தியால் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளமுடியாது. இதயம் புரிந்துகொள்ளும். கிடைத்துள்ள இதயத்தையும் உபயோகியுங்கள். ஒருவனின் ஒரு கை சிறு வயது முதலே பின்னால் கட்டப்பட்டு ஒரே கையால் எல்லாமே செய்யவேண்டியிருந்தது. பிறகு ஒருவர் அந்தக் கட்டுக்களை அவிழ்த்தார். அவனுக்கு இரண்டு கைகளும் கிடைத்ததும் அவனுக்கு வாழ்நாள் முழுவதும் என்ன குறை இருந்ததோ அது நீங்கிவிட்டது. அதே போல் நாம் நமது இதயத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றால், நமது ஒரு கை குழந்தைப் பருவம் முதல் பின்னால் கட்டப்பட்டுள்ளது, நாம் இன்றுவரை வேலைகளை எல்லாம் ஒரு கையால் மட்டுமே செய்துள்ளோம். நமக்கு நினைவு தெரிந்த நாள் முதலாக இதயத்தினுள் ஒரு தாகம் அந்த பரமானந்தத்தை பெறுவதற்காக எப்பொழுதும் உள்ளே நம்மை தூண்டிக்கொண்டிருக்கிறது.

நம்முள்ளே ஒரு மகிமைவாய்ந்த உண்மை இருக்கிறது, அதுதான் பரமானந்தம். அந்த பேரின்பம், சாந்தி, ஆனந்தத்தை நாமே அனுபவிக்கலாம். அந்த அனுபவத்தின் ஆனந்தத்தைப் பெறலாம். நீங்கள் உயிருடன் இருக்கிறீர்கள் என்றால் சுலபமாக ஆனந்தமடையலாம். இதற்காக என்ன செய்ய வேண்டும்? தேடுவதால் இது கிடைக்காது. ஏனென்றால் இந்த பேரின்பம் ஏற்கனவே உங்களுள் இருக்கிறது. அதாவது உங்கள் அருகில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையான சுகம் எங்கே உள்ளது?

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் இன்பமே விரும்புகிறான். எல்லோருக்கும் குழந்தைப் பருவம் முதலே ஆனந்தம் பெற ஆசை இருக்கிறது. வாழ்வில் ஆனந்தமும், இன்பமும், சாந்தியும் வேண்டும். ஆனந்தம் கிடைத்துக்கொண்டிருந்தால் எல்லாம் சரிதான். மனிதனுக்கு இன்பம் பெறுவதற்கு ஒரு எல்லையே கிடையாது. ஆனால், சிறிதளவு துன்பம் கூட தாளமுடியாது. இதுதான் மனிதனின் இயற்கை. என்றால், தன் வழ்வில் இன்பம் பெற அவன் செய்யும் செயல்கள் என்ன? ஏனென்றால், அவனுக்குக் கிடைப்பது துன்பம்தான். இருந்தும் அவன் திரும்பத்திரும்ப அவைகளையே செய்து துன்பமடைகிறான். விரும்புவது இன்பத்தை ; ஆனால் அடைவது துன்பம்தான். இதுதான் இவ்வுலகின் நியதி. உலகம், அதன் விருப்பப்படி நாம் நடந்தால் இன்பம் கிடைக்கும் என்று வாக்குறுதி அளிக்கிறது? துன்பம்; துன்பம் மட்டுமே! ஆனால் இங்கே பேசப்படுவது உண்மை இன்பம் பற்றி; நிலையற்ற இன்பம் அல்ல; நிரந்தரமானது; சூழ்நிலைகளால் பாதிப்படையாத இன்பம். அது எப்படி கிடைக்கும்? நம் வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்கும் அந்த உண்மை இன்பம் எங்குள்ளது?

இவ்வுலகில் ஒவ்வொரு மனிதன் வாழ்கையிலும் இன்ப-துன்பங்கள் உண்டு. துன்பங்களிலிருந்தும் , அமங்களமான விஷயங்களிலிருந்தும் ஒவ்வொரு மனிதனும் விலகயிருக்கவே விரும்புகிறான். துன்பம் விளைவிக்கும் விஷயங்களிலிருந்து மனிதன் விலகி இருக்க விரும்புவதன் காரணம் என்ன, என்று சிந்தியுங்கள்.

துன்பங்கள், அமங்களமான விஷயங்களிலிருந்து மனிதன் விலகி இருக்க விரும்புவதன் காரணம் என்ன, என்று சிந்தியுங்கள், துன்பங்கள், அமங்களமான விஷயங்களிலிருந்து தப்பும் வழிகளைத்தேடி நாம் பல இடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் செல்கிறோம்;

பல மாதங்களையும் பின்பற்றுகிறோம், கடவுளிடம் எப்பொழுதும் வேண்டிக்கொள்கிறோம்; பஜனைகளும் பூசை களும் செய்கிறோம். கடவள் மேல் நம்பிக்கை வைக்காத பலர் தங்கள் உத்தியோகங்களையே முழுமையாக நம்பி வரும்காலத்தில் எந்த துன்ப மும் நேராமல் வாழ போதுமான அளவு செல்வம் சம்பாதிக்க விரும்பு கிறார்கள்.

துன்பமில்லாமல் இருப்பதே இன்பம் என்று நாம் நினைக்கிறோம். துன் பம் நேரிடாமல் இருந்தால்தான் இன்பம் சாத்தியம் என்று நாம் நினைக் கிறோம். இன்பம் எது அன்று நமக்குத் தெரியவில்லை. துன்பம் அளிக் கும் விஷயங்கள் இல்லாதபொழுது நாம் நம்மை இன்பமடைந்தவராக எண்ணுகிறோம். இதுதான் இன்பமா? உலகம் இப்படித்தான் நினைக்கிறது. நாமும் கடவுளிடம் இதைத்தான் வேண்டிக்கொள்கிறோம்.

ஒரு உதாரணம் – ஒரு கிராமத்தில் ஏழை ஒருவன் இருந்தான். தன் ஏழ் மையிலிருந்து விடுதலை பெற அவன் இரவு–பகல் கடவுளிடம் பக்தி செய்து வந்தான். அவன் வேண்டுதலை செவிமடுத்த கடவுள் ஒருநாள் அவன் முன்தோன்றி அவன் விருப்பம் என்ன என்று கேட்டார். அவன் மிகுந்த வினயத்துடன் உங்கள் கருணையால் எனக்கு தரிசனம் அளித் துள்ளீர். என் விருப்பம் எனக்கு ஒரு நல்ல உத்தியோகம் கிடைக்க வேண் டும், என்றான் கடவுளும் "அப்படியே நடக்கட்டும்" என்றார்.

அவனுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்தது. சில வருடங்கள் கழிந்தன. ஒரு நாள் அவன் திரும்பக் கடவுளிடம் வேண்டினான்; கடவுள் எதிரே தோன்றி என்ன வேண்டும், என்று கேட்டார். "கடவுளே!, இந்த சிறிய குடிசையில் வாழ்வது சிரமமாக இருக்கிறது. பெரிய வீடாக இருந்தால் நன்றாக இருக் கும். என்றான். கடவுள் "சரி உன் வீடும் பெரியதாக இருக்கும் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெள்ள வருடங்கள் உருண்டோடின ; அவன் அந்த பெரிய வீட்டிலும் திருப்தியாக இல்லை. கடவுளைப் வேண்டினான். மறுபடியும் கடவுள் தோன்றி "இப்பொழுது உன் ஆசை என்ன? என்றார். அவன் கூறினான், செல்போனால் வீட்டில் ஒரு துன்பமும் இல்லை ஆனால் தனியாக மனம் லயிக்கவில்லை. ஒரு அழகான குணவதியான பெண்ணுடன் திருமணம் செய்வித்தீர்களானால் என் வாழ்வு வளம் பெற்றுவிடும்." கடவுள் " அப் படியே ஆகக்கடவது! உன் இந்த ஆசையும் பூர்த்தியாகும்." என்றார்.

திருமணத்திற்குப் பிறகு ஆனந்தமாக நாட்கள் கழிந்தன. சில வருடங் களுக்குப் பிறகு அந்த மனிதன் திருப்பக் கடவுளிடம், குழந்தைக்காக வேண்டினான். கடவுளின் அருளால் சிரிப்பொலி எதிரொலிக்கத் தொடங்கியது. இப்படியே வருடங்கள் பல கழிந்தன. இப்பொழுது அவன் வீடு, அவன் குடும்பத்தார்களுக்கு போது மானதாக இல்லை. கவலையுடன் அவன் கடவுளிடம் வேண்டினான், ஏ! கடவுளே, என் குடும்பத்தாருக்கு நான் எந்த இன்பமும் கொடுக்க முடிய வில்லை. என் வீடு மேலும் பெரியதாகவும், வேலை, வியாபாரம் மேலும் உயர, குழந்தைகளின் திருமணங்களும் நல்லபடியாக நடந்தால், என் வாழ்வு பயனடைந்ததாகக் கருதுவேன்" , என்றான். கடவுளும் உன் ஆசைப்படியாகும்" என்றார்.

அந்த மனிதன் கடவுளிடம் கேட்டதெல்லாம் உகந்த காலத்தில் அவனுக்கு கிடைத்தன. இப்பொழுது அவன் வாழ்கையில் கடைசி கட்டத்திற்கு வந்துவிட்டான். குழந்தைகளுக்கு திருமணமாகி பேரன் பேத்திகளும் இருக்கிறார்கள். முதிர்ந்த வயது. பற்கள் உதிர்ந்துவிட்டன, முதுகும் கூனிப் போய்விட்டது. கண்கள் தெரியவில்லை, காது கேட்காத நிலையில் துக் கத்துடன் இருப்பதைக் கண்டு திரும்பக் கடவுள் அவன் முன் தோன்றி, இப்பொழுது அவன் நிலையைப் பற்றி விசாரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கூறினான், கடவுளே, நாட்கள் எப்படி கழிந்தன என்ற விவரமே தெரியவில்லை. எல்லாம் கிடைத்தும், ஒரு குறையை உணர்கிறேன், எனக்கு இப்பொழுது ஒரேஒரு விருப்பம்தான். எனக்கு சாந்தி வேண்டும். இவ்வளவு வாய்ப்புக்கள் கிடைத்தும், நான் உலக இன்பங்களையே யாசித்து வந்தேன். இன்று நான் உணர்ந்தேன் – முதலிலேயும் கடைசியிலும் எனக்குத் தேவை சாந்தி தான்.

கடவுள் கூறினார், "உன் வாழ்வில் நீ மற்ற எல்லாத் தேவைகளையும் புரிந்துகொண்டாய். ஆனால், சாந்தியின் அவசியத்தைப் புரிந்துகொள்ளவில்லை. நீ முதலிலேயே சாந்தியைக் கேட்டிருந்தால் அப்பொழுதே உனக்கு அளித்திருப்பேன். உன் வாழ்வில் குறை தோன்றியிருக்காது. மற்ற பொருள்கள் மூலம் சாந்தி கிடைக்கும் என்று எண்ணியபடி இருந்தாய். இவைகளால் சாந்திகிடைக்காது.

நாமும் நம் வாழ்வில் நிச்சயமாக சாந்தியை விரும்புகிறோம். ஆனால், எல்லா வேலைகளும் வெற்றி அடைந்தால் நமக்கு சாந்தி கிடைத்து விடும் என்று எண்ணுகிறோம். ஆனால் உண்மையான இன்பம், சாந்தி, பேரானந்தம் இந்தப் பொருள்களை சார்ந்தது அல்ல.

உண்மையான இன்பம், சாந்தி வெளியில் இல்லை. படைப்பாளர் மனிதனுள் இன்பத்திற்கும், சாந்திக்கும் ஒரு தாக்கத்தை உண்டாக்கியுள்ளார் என்றால், அந்த இன்பமும் , சாந்தியும் மனிதனிடமிருந்து தொலைவில் இல்லை. அவன் அருகில் இருக்கிறது. அதை வெளியே தேட அவசியமில்லை. கேள்வி இதுதான்–ஆனாலும், மனிதன் ஏன்துக்கத்துடன் இருக்கிறான்? உண்மை இன்பமும், சாந்தியும் உங்களுள் இருக்க அதை பெறுவது எப்படி?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வில் சாந்தி சாத்தியமா?

சாந்தி தேவையில்லாத எந்த மனிதனும் இவ்வுலகில் இல்லை. ஆனால் சாந்தி எப்படிப்பட்டது, எப்படி கிடைக்கும் என்பது பற்றி எல்லோருக்கும் தனித்தனி எண்ணங்கள் உள்ளன. சண்டைகள் நின்றுவிட சாந்தி ஏற்பட்டு விடும் என்று மக்கள் நினைக்கிறார்கள். சண்டை மைதானத்திலும் கூட அனுபவிக்கக் கூடிய அப்படிப்பட்ட சாந்தியைப்பற்றி நான் பேசு கிறேன். சிறைச்சாலைக்கு உள்ளே இருப்பவர்கள் கூடஅனுபவிக்கக் கூடிய அப்படிப்பட்ட சுதந்திரத்தைப் பற்றிப் பேசகிறேன். இது வெறும் பேச்சல்ல. ஏனென்றால் ஈராக், ஆப்கானிஸ்தானில் சண்டைக்குச் சென்ற வர்கள் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் போதே, அங்கே இந்த சாந்தியை யும் அனுபவித்தார்கள். சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு அங்கேயே ஞானவழிமுறை கிடைத்தது, இப்பொழுது தினம் இந்த இன்பம், சாந்தி, உண்மையான சுதந்திரத்தை சிறைச்சாலையில் இருந்தபடி அனுபவித் துக் கொண்டிருக்கிறார்கள். இந்த சாந்தி எந்த வெளிப்பொருள்களையும் சார்ந்து இருப்பதல்ல. எல்லோருக்கும் தேவை இப்படிப்பட்ட சாந்திதான். ஆனாலும், இவ்வளவு தெளிவானதை நம்மால் ஏன் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை? ஏன் அப்படி?

ஒவ்வொரு பொருளுக்கும் அதனதன் இயற்கை உண்டு. உதாரணமாக சூரியன் மிகவும் சக்தி வாய்ந்து. அதன் உஷ்ணத்தாலும், வெளிச்சத்தாலும் உயிரினங்கள் உயிர் வாழ்கின்றன, மரம்–செடிகொடிகள் வளர்கின் றன. எல்லோருக்கும் தண்ணீர் கிடக்கிறது. சூரியன் இல்லை என்றால், பூமி முழுவதும் பனிக்கட்டியாகி எல்லாம் அழிந்துவிடும். மனிதன் வாழ்க்கை சூரியனைச் சார்ந்திருக்கிறது. சூரியன் ஒளி கொடுக்கிறான் என்பது எல்லோருக்கும் தெரியும். கண் தெரியாதவன் சூரியனைப் பார்க்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சூரியனின் வெப்பத்தை அனுபவித்திருக்கிறான். அவனுக்கு சூரியன் என்ற ஒன்று இருப்பது தெரியும். தண்ணீரை டப்பாவில் வைக்கமுடியும். ஆனால், சூரிய ஒளியை டப்பாவில் வைக்க முடியாது. சூரிய ஒளியின் இயற்கை, அதை உற்பத்தியாக்கும் அந்தப் பொருள் அங்கு இருக்கும் வரை தான் ஒளி வந்துகொண்டிருக்கும் அதை கொடுக்கும் அந்தப் பொருள் அங்கிருந்து சென்று விட்டால் ஒளியும் அந்த இடத்தில் இருந்து சென்றுவிடும். உற்பத்தியாகும் அந்தப் பொருள் மிக அவசியம். பல்ப் ஒளி கொடுக்கிறது ஆனால் அதில் மின்சாரம் பாய்ந்தால் தான் ஒளி கொடுக்கும் பல்ப் ஒளி கொடுக்க மின்சாரம் அவசியம். அந்த பல்ப்பிலிருந்து மின்சாரத்தை நீக்கி விட்டால் பல்ப் ஒளி தராது.

அதேபோல், மனிதனுக்கு சாந்தி தேவை என்றால், தன் வாழ்வை சொர்க்கம் ஆக்கவேண்டுமானால், எது இருப்பதால், எதனுடன் இணைவதால் மனிதனுக்கு சாந்தி ஏற்படுமோ, அதை உற்பத்தியாக்கும் பொருள் தேவை. அந்தப் பொருள் அங்கு இருப்பது அவசியம். அந்த சாந்தியின் ஊற்று நம் வாழ்வில் இல்லை என்றால் நமக்கு சாந்தி எப்படி கிடைக்கும்? முக் கியமான விஷயம், அந்த ஊற்றை நாம் உண்டாக்கவேண்டுமா, அல்லது அது ஏற்கனவே இருக்கிறதா?

சாந்தியைப்பற்றி மக்களிடம் பல எண்ணங்கள் உள்ளன. ஆனால் சாந்தி அனுபவிக்கவேண்டிய ஒரு விஷயம். மாம்பழத்தை ருசித்து அனுபவிக்கத்தான் முடியும், அதன் விளக்கம் தரமுடியாது. நோயாளி மருத்துவ மனைக்குச் செல்கிறான். அங்கே இரண்டு டாக்டர்கள் இருக்கிறார்கள். ஒரு புதிய டாக்டர், மற்றவர் பழைய நல்ல அனுபவம் பெற்றவர். சிகிச்சைக்கு எந்த டாக்டர் உகந்தவர்? அனுபவம் உள்ள டாக்டரிடம் நீங்கள் ஏன் வைத்தியம் செய்துகொள்ள விரும்புகிறீர்கள்? புதிய டாக்டரிடம் இருப்பது புத்தக அறிவுதான், மருத்துவ சான்றிதழ் அவரை டாக்டர் என்று கூறகிறது, ஆனால் அனுபவம் மிக முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயவிமானத்தை எப்படி ஓட்டுகிறார்கள்? "தியரி"யாக யார் எத்தனை கற்றுக்கொடுத்தாலும் பயனில்லை. ஆகாயவிமானத்தை ஓட்டிப் பார்க்காத வரை எல்லாமே அரைகுறைதான். யாராவது உங்களிடம் "நான் உங்களை ஆகாயவிமானத்தில் அழைத்துச் செல்ல விரும்புகிறேன். ஆனால், நான் என் வாழ்வில் இதுவரை ஓட்டியதில்லை, கவலைப்படதீர்கள்! புத்தகத்தை முன்னால் வைத்திருக்கிறேன், படித்து ஓட்டிவிடுவேன்!" என்றால், நீங்கள் என்ன செய்வீர்கள்? இப்படித்தான் கூறுவீர்கள், " நீ போய்வா, நான் வர வில்லை." விமான ஓட்டியோ, டாக்டரோ என்றால், மக்கள் அனுபவம் மிக அவசியம் என்று கூறுகிறார்கள். இம்மாதிரி விஷயங்களில் மனிதனுக்கு அனுபவம் தேவை. அனுபவம்! ஆனால் சாந்தியைப் பற்றி பேசுகையில், மக்கள் அதற்கு அனுபவத்தைப் பார்ப்பதில்லை. "புத்தகத்தைப் படியுங் கள், அதில் எழுதப்பட்டுள்ளது. அவ்வளவுதான், அதுவே போதும்"

நாம் நமது வாழ்வில் சாந்தியின் அனுபவம் பெறத் தயாரா? உண்மை யில், நாம் நமது வாழ்வில் அந்த சொர்கத்தை அனுபவிக்கத் தயாரா, அல் லது பேச்சிலயே தங்கிவிடுவோமா? ஏனென்றால், எதை அனுபவிப்பது அவசியமோ, அது சொற்களிலோ, எண்ணங்களிலோ அடங்கியது அல்ல. அதை நேராக, அப்படியே அனுபவிக்க வேண்டியது அவசியம். சாந்தி நமக்குத் தேவை. இது நமக்குள் இருக்கும் தாகம். நம் இதயத்தின் விருப்பம்.

மனிதன் சாந்தியை விரும்பினால், தன் வாழ்க்கையை சொர்க்கமாக்க விரும்பினால், அவனுக்கு எந்த உற்பத்தி ஸ்தானம் இருப்பதால், அதனு டன் இணைவதால், சாந்தி ஏற்படுமோ, அந்த உற்பத்தி ஸ்தானம் அவசிய மாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையான தேவை

இவ்வுலகம் தேவைகளின் அடிப்படையில் செயல்படுவது என்பது ஒரு சிறந்த விஷயம். மனிதனுக்கு தினப்படித் தேவைகள் உள்ளன. பசித்தால் உணவு தேவை. தாகம் எடுத்தால் தண்ணீர் தேவை. மனிதன் களைப் படைந்தால் ஓய்வு தேவை. உறக்கம் வந்தால் உறங்க இடம் தேவை. இந் தத் தேவைகளின் காரணத்தால் உலகில் எவ்வளவு வியாபாரம் நடை பெறுகின்றன! உங்களுக்கு உறங்க இடம் வேண்டும், கட்டில் வேண்டும்; அதனால் கட்டில் வாங்கவேண்டும், உண்பதற்கு காய்கறி தேவையென் றால், அதற்கு கடைகள் உள்ளன. சமைக்கத் தேவை இருப்பதால்; மைக் ரோவேவ் ஓவன் செய்பவர்களும், காஸ் விற்பவர்களும் இருக்கின்றார் கள். காஸை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடம் எடுத்துச்செல்ல கார் களும், டாங்கர்களும் உள்ளன. சிந்திக்க வேண்டிய விஷயம்– மனிதர் களின் தேவைகளை பூர்த்தி செய்வதால் தான் செல்வந்தனாக முடியும்; அதனால் தேவைகளை உண்டாக்கவேண்டும் , என்று மனிதன் எண்ண ஆரம்பித்தான். உண்மையில் மனிதனுக்கு சில தேவைகள் அவசியம் இல்லை; ஆனால், மனிதனே இந்தத் தேவைகளை உண்டாக்குகிறான். இந்தத் தேவைகளை பூர்த்தி செய்ய நாம் பணம் செலவு செய்கிறோம். அதனால், நாம் செல்வந்தனோ, ஏழையோ ஆகிறோம்.

நம் சுபாவம் – வாழ்க்கையில் எல்லாவற்றையும் ஓரே முறையில், உடனே அடைய விரும்புகிறோம்; தன் எண்ணங்களின் அடிப்படையில் இவ்வுல கத்தில் முன்னேற முயல்கிறோம். பலமுறை உலகத்தின் பொருள்களை நம் எண்ணங்களால் அடைய முயல்கிறோம்; ஆனால், சில பொருள்களை அனுபவிக்க மட்டுமே முடியும். ஒரு எளிமையான உதாரணம், உணவு; ஏன் அவசியம்? சமையல் ஏன் அவசியம்? ஏனெனில், மனிதனுக்கு உண் பது அவசியம். மனிதனுக்குப் பசி இல்லாவிடில், அவன் உண்பானா? பசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் பொழுது உணவை அனுபவிக்கிறான். மனித உடல் இயங்கு அந்த உணவு பொருள்கள் அவசியம் ஏற்படும் என்பதால் கட வுள் மனிதனுக்கு பசியையும் படைத்திருக்கிறார். அவனுக்குப் பசி எடுத் தால் உணவு வேண்டும். உணவு தேவை என்பதால், மனிதன் உணவு தயார் செய்ய சமையலறையை கண்டுபிடித்தான். மேலும், அவனுடைய பசி அடங்கும்படி உணவு தயாரிக்க சமையல் செய்பவனும் தேவைப்படு கிறது. இலுப்பைச்செட்டி, அடுக்குகள், கரண்டிகள், போன்றவைகளையும் கண்டுபிடித்தான்; ஏனென்றால், அப்பொழுதுதான் சமையல்செய்பவன் உணவை சௌகரியமாக தயாரித்து அவன் பசியை திருப்தி செய்யக் கூடும்.

விஷயம் இத்துடன் முடிவதில்லை. இதற்கு மேலும் இருக்கின்றன. கறி–கூட்டு செய்ய காய்கறியும் பயிராக்க வேண்டும். காய்கறிகளை சிறந்த முறையில் பயிர் செய்யவும் மனிதன் புதி–புதிய முறைகளை கண்டு பிடித் திருக்கிறான்; மேலும் அதில் முயன்று கொண்டு இருக்கிறான். கடைசி யில் அடிப்படை காரணம் ஒன்றுதான்–பசி அடங்கவேண்டும். மக்கள் வருஷக்கணக்காக சர்வகாலசாலைகளில் படித்து, அவரவர் படித்த பிரி வில் டாக்டர் பட்டம் பெறுகிறார்கள். அந்த பட்டத்திலிருந்து, ஒருவர் எந்த வேலைக்குத் தகுந்த டாக்டர் பட்டம் பெற்றுள்ளார், என்பது தெரியவரும். இதனால், அவர்கள் புதிய–புதிய பொருள்கள் உற்பத்தியாக்கக் கூடிய விதைகளை செய்யமுடியும்; அதனால் , பெரிய, சிறந்த பழங்கள் உண் டாகும். சிறிய பழங்கள் அல்ல; பெரியது – பெரிதாக; விவசாயிக்கு, ஒவ் வொரு ஹெக்டர் அல்லது ஒவ்வெரு ஏகர் நிலத்தில் மேலும்–மேலும் அதிகமாக பழங்கள் கிடைக்கும். மேலும்–மேலும் சிறந்த காய்–கறிகள் கிடைப்பதற்காக மக்கள் நிறைய செலவு செய்கிறார்கள். விவசாயி விளைச்சல் மட்டும்தான் செய்கிறான். பிறகு வேறு சிலர் வருகிறார்கள் விளைந்ததை எடுத்து, பெட்டிகளில் வைத்து, லாரிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துச் செல் கிறார்கள். கடைகளும், பெரிய–பெரிய சூபர் மார்க்கட்டுகளும் வைக்கப் பட்டுள்ளன. அதனால், தினந்தோறும் இந்தியாவிலிருந்து இங்கிலாந் துக்கு காய்–கறிகள் ஏற்றுமதி ஆகிறது. கடைசியாக இதன் பலன் என்ன? பசி அடங்கத்தான்! ஏனென்றால், பசியின் தீர்வு மனிதனுக்கு அவசியம்.

மனிதர்களின் சமுதாயமும் பலமுள்ளது – ஸொஸைடி உங்களுக்குத் சில தேவைகள் அவசியம், என்று அதுவே சுமை ஏற்றுகிறது. மக்கள் எல் லோரும் அந்த அவசியங்களை பூர்த்தி செய்வதில், இரவு–பகலாக ஏதா வது செய்தபடி இருக்கிறார்கள். ஒரு சிறிய விஷயம் நீங்கள் தெருவில் செல்லும் பொழுது, டிராஃபிக்கில் சிக்கிக்கொள்ளும் பொழுது, இவை யெல்லாம் ஏதோ அவசியங்களை பூர்த்தி செய்ய நடைபெறவதாகக் தெரியவரும் அவசியம் என்ன என்ற உங்களுக்குத் தெரியாது, ஆனா லும் சிலர் இங்கும், சிலர் அங்கும் சென்றுகொண்டு இருக்கிறார்கள் . இவையெல்லாம் அவசியங்களைப் பூர்த்திசெய்ய நடைபெறுவதாகத் தெரியவரும். அவசியம் என்ன என்று உங்களுக்குத் தெரியாது. ஆனா லும் சிலர் இங்கும் சிலர் அங்கும் சென்று கொண்டிருக்கிறார்கள் இவை யெலலாம் அவசியங்களைப் பூர்த்தி செய்யவே நடைபெறுகின்றன. நாம் கூறுவதை நீங்கள் அங்கீகரித்தால் அவசியங்கள் தான். ஒரு என்ஜின் போல் உலகின் பின்னால் இருந்து கொண்டு மனிதர்களை வருத்துகிறது. ஆனால் மனிதன் தன் சொந்த அவசியங்களை பூர்த்தி செய்வதில் கஷ்ட படுவதில்லை. ஆனால் சமுகமோ உலகமோ நம்மேல் சுமத்தும் அவசியங் களைப் பூர்த்தி செய்வதில் மனிதனுக்கு உண்மையில் கஷ்டம் உண்டா கிறது. அவன் கடவுளிடம் " ஏ கடவளே, இப்படிச் செய்யுங்கள் அப்படிச் செய்யுங்கள் என்று வேண்டிக் கொள்கிறான். அதாவது, மனிதன் கடவுளை யும் ஒரு கடைக்காரன் போல் ஆக்கிவிட்டான். நாம் "ஏ கடவுளே, எனக்கு நல்ல வேலை வேண்டும் எனக்கு வேலையில் உயர்வுவேண்டும் மகன் வேண்டும் எனக்கு கார் வேண்டும்" என்ற பெரிய பட்டியலுடன் கடவுளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரத முனிவரைப்பற்றி ஒரு கதை உண்டு அவர் ஒரு முறை சுயம்வரத் துக்குச் சென்றார். அங்கு ஒரு அழாக பெண்ணை பார்த்தார் "அவர் கடவுளே அந்த பெண் வேறு ஒருவர் கழுத்திலும் மாலை போடதபடி என்னை அவ்வளவு அழகாகச் செய்யுங்கள் நேராக என்னிடம் வந்து என் கழுத்தில் மாலை போடவேண்டும். எது எனக்கு நன்மையோ, அதையே செய்யவும் என்று கடவுளை வேண்டிக்கொண்டார். கடவுள் கடவுள்தான்! அவரைப்பற்றி யார் புகார் கூறுவார்கள்? அவர் நாரத முனிவருக்கு குரங் கின் முகம் கொடுத்தார்; தானும் சுயம்வரம் வந்தார். முடிவில், அந்தப் பெண் கடவுளின் கழுத்தில் மாலை போட்டுவிட்டாள். அன்று நாரதர் அவ் வளவு கோபம் அடைந்தார்; கடவுளுக்கே சாபம் கொடுத்தார்!

இம்மாதிரியே மக்களிடம் பட்டியல்கள் இருக்கின்றன; ஏனெனில், அவர் களுக்கு பூர்த்தி செய்யவேண்டிய அவசியங்கள் உள்ளன. ஆனால், உங் கள் உண்மை அவசியம் என்ன, என்று நீங்கள் சிந்தித்ததுண்டா? மக்கள் தங் கள் அவசியங்களை பூர்த்தி செய்வதில் ஈபட்டுள்ளார்கள். ஆனால், ஒரு பொழுதும், இது என் வாழ்க்கை; நான் உயிருடன் இருக்கிறேன்; என் னுள் மூச்சு வருகிறது; என்னுள் மூச்சு செல்லுகிறது; நான் உயிர் வாழும் காலத்திற்கு ஒரு எல்லை உண்டு. அதன் பிறகு நான் இருக்கமாட்டேன். அந்தக் காலம் இப்பொழுது வரும், என்பது எனக்குத் தெரியும். நான் உயி ருடன் உள்ளவரை என் உண்மை அவசியம் என்ன? என் வாழ்க்கையில் என் உண்மை அவசியத்தை பூர்த்தி ஆகாது". மனிதன் எவ்வளவு முயற் றாலும் எல்லா அவசியங்களையும் பூர்த்தி செய்ய முடியாத நிலையில், ஒரு முக்கியமான தேவை நிச்சயம் இருக்கும்; அதை மனிதன் பூர்த்தி செய்யக்கூடும்.

இவ்வுலகில் பேசுபவர்களுக்குக் குறைவு இல்லை. எல்லோரும், வெறும் கையுடன் வந்தாய்; வெறும் கையுடனே செல்லவேண்டும்" என்கிறார்கள். அப்படி இருந்தால், படைப்பாளர் கைகள் ஏன் கொடுத்தார்? வெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லவேண்டும் என்றால், இவை எல்லாவற்றிர்க்கும் என்ன உபயோகம்? இந்த உடலின் உபயோகம் என்ன? இந்த நேரத்தின் உபயோகம் என்ன? இந்த ஆகாயத்தின் உப யோகம் என்ன? பழங்களுக்குள் படைத்திருக்கும் தித்திப்பின் உப யோகம் என்ன? உண்மை என்ன? ஒருகாலத்தில் ஒன்றும் இல்லை; அப் படி ஒரு காலம் வந்தது, அது இருக்கிறது – நீங்கள் இப்பொழுது இருப் பது; அப்படி ஒரு காலம் வரும்; அதில் ஒன்றும் இருக்காது. உங்கள் உண்மை அவசியம் என்ன? இதை உங்கள் இதயத்திடம் கேளுங்கள். ஏனென்றால், அனுபவத்திற்கு ஒரு மாற்றும் கிடையாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயப் புத்தகத்தைப் படிக்கத் தெரியுமா?

இங்கு பேசப்படும் விஷயம், காகிதத்தின் பக்கங்களில் மையினால் எழுதப்பட்டது இல்லை. இது உங்கள் இதயம் என்ற காகிதத்தில் எழுதப்பட்டுள்ளது. உங்களுள் எழுதப்பட்டுள்ளது. உங்களுள் எழுதப்பட்டுள்ளது. இது ஏதோ மனிதனால் படைக்கப்பட்டது இல்லை. இது இவ்வுலகம் முழுவதையும் படைத்த படைப்பாளரின் படைப்பு. இந்த உலகத்தின் படைப்பாளர் தன் கையினாலேயே உங்களுடைய இதயத்தின் புத்தகத்தில் எழுதியிருக்கிறார். ஆனால், விஷயம் என்னவென்றால், நம் வாழ்க்கையில் மற்ற புத்தகங்களை நன்றாகப் படிக்கிறோம்; ஆனால், இயத்தின் புத்தகத்தில் எழுதியுள்ளதை? படிக்க முயல்வது இல்லை.

இந்த இதயப் புத்தகத்தில் என்ன எழுதியுள்ளது? அரசாங்கமோ, சோனையோ, விமானப்படையோ, விஞ்ஞானியோ தீர்வு காணமுடியாத பிரச்சனைகளுக்கு தீர்வு, இந்த இதயப் புத்தகத்தில் எடுதப்பட்டுள்ளது. அந்தப் பிரச்சினை என்ன? அதுதான் மனிதனுள் சாந்தியின்மை. அது எல்லாவற்றையும் விட பெரிய பிரச்சினை. ஒருவனை செல்வந்தனாக ஆக்குவது எளிது; ஒருவனை ஏழையாக ஆக்குவது எளிது; ஆனால், ஒரு வனுடைய இதயத்தில் சாந்தியின் அனுபவம் பெறவைப்பது குழந்தை விளையாட்டு போல் அல்ல. இது எளிமையான விஷயம் அல்ல. இதில் நீங்கள் முழுமையாக பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். இது உங்கள் வாழ்க்கையின் பிரச்சினை.

ஒரு புத்தகத்தை திறந்தால், அது ஒரு பக்கம் தடிமனாகவும், மற்றொரு பக்கம் மெலியதாகவும் இருக்கிறது. ஏடுகளை. புரட்டிக்கொண்டே இருந்தால், மெலிந்த பாகம் தடிமனாகவும், தடிமனான பக்கம் மெலிந்தும் போகும். ஒவ்வொன்றாக அந்தப் புத்தகத்தின் எல்லா ஏடுகளும் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் சென்றுவிடும். இந்த வாழ்க்கையும் ஒரு புத்தகம்தான்; ஆனால், அதன் ஏடுகளையும் ஒரு பக்கத்திலிந்து மற்றொரு பக்கம் புரட்டமுடியும் ; ஆனால், திரும்பவும் மாற்றின பக்கத்திலிருந்து முதல் பக்கத்துக்கு புரட்ட முடியாது. இந்த வாழ்க்கையின் புத்தகத்தில் எழுதப்பட்டதையெல்லாம் படிக்கவேண்டும் என்றால் மிகவும் கவனமாக படிக்கவேண்டும். ஏனென்றால், அதில் எழுதப்பட்டது துக்கம் அனுபவிக்க அல்ல; இன்பம் அடைவதற்கு எழுதப்பட்டது துக்கம் அனுபவிக்க அல்ல; இன்பம் அடைவதற்கு எழுதப்பட்டுள்ளது. ஏற்கனவே உங்கள் உள்ளே வீற்றிருந்தும், நீங்கள் அறிந்துகொள்ளாத அந்த பரமானந்தத்திற்காக, அந்த பரம சாந்திக்காக எழுதப்பட்டுள்ளது.

தாகமும் நம் இயத்தினுள் இருக்கிறது; சாந்தியும் நம் இதயத்தினுள் இருக்கிறது. மக்கள் இதயம் என்பது என்ன, என்று கேட்கிறார்கள். அது நம் அருகிலேயேதான் இருக்கிறது; ஆனால், நமக்குத் தெரியவில்லை. நீங்கள் சிறிது கண்களைத் திறந்தால்கேள்வி எழும்–எந்தப்பொருள் உங்களை சாந்தி அடையும்படி தூண்டிற்று? அதுவே இதயம். உன் வாழக்கையை வெற்றியுள்ளதாகச் செய், என்று இதயம் உள்ளிருந்து தூண்டு கிறது. இந்த வாழ்க்கை ஆனந்தத்தினால் நிரம்பிக் கழிய, உங்கள் உள்ளே உள்ள அந்த சாந்தியை அனுபவியுங்கள் உண்மை சாந்தி; போலி சாந்தி இல்லை. இன்று இருந்து நாளை இருக்காத அடிப்பட்ட ஆனந்தம் இல்லை. எப்பொழுது தேவைப்பட்டாலும் உள்ளே சென்று, அந்த ஊற்றின் அடியில் அமர்ந்து, ஆனந்தம் என்ற குளிர்ந்த தண்ணீரில் குளிக்க முடியும். அப்படிப்பட்ட இடம் கிடைத்தால் ஆனந்தமயம்தான். இவை எல்லாம் மனிதனின் உள்ளே இருக்கின்றன. உங்களால் அடையமுடியாத அப்படி ஒரு பொருளையும் கடவுள் படைக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயதத்தினுள் அரசியல் செல்லாது; இதயத்தினுள் அரசாங்கம் செல்லாது. இதயத்தினுள் செல்வந்தன் என்பதோ, ஏழை என்பதோ இல்லை; சிறியவர் என்பதோ பெரியவர் என்பதோ கிடையாது. இதயத்தினுள் இதம் மட்டும்தான் இருக்கிறது, அதனுள் எல்லையற்ற சாந்தி இருக்கிறது, அதனுள் எல்லை யற்ற ஆனந்தம் இருக்கிறது. எல்லோருடைய இதயமும் அந்த ஆனந்தத்தால் நிரம்பியுள்ளது. இப்பொழுது நாம் அந்த ஆனந் தம் வரை அடைகிறோமோ அப்பொழுது இதயத்தின் தாகம் அடங்கும். அதன்முன் அடங்காது. இதயத்தின் தாகம் புத்தகங் களால் அங்காது, இதயத்தின் தாகம் சொற்களால் அடங்காது. இந்த விஷயத்தின் பாதிப்பு எல்லா மனிதர்களுக்கும் சமமானது. உங்களுக்கு இது தெரிந்திருந்தும் அறிந்துகொள்ளவில்லை. உயிர் வாழ்க்கை விலை மதிக்க முடியாதது என்பது உங் களுக்குத் தெரியும், ஆனால் அதை அறிந்துகொள்ளவில்லை. என்று அறிந்து கொள்வீர்களோ அன்று உயிர்வாழ்க்கை ஆசிர் வசிக்கப்பட்டதாகும். அறிந்துகொள்வீர்களோ அன்று உயிர் வாழ்க்கை ஆசிர்வதிக்கப்பட்டதாகும். அறிந்துகொள்வது எப்படி, என்பதே கேள்வி.

நீங்கள் அந்த ஆனந்தத்தை அலைந்து தேடுங்கள், எப்படியா வது இதயத்தின் புத்தகத்தை படிக்கத்தெரியவேண்டும். இது நடக்கவேண்டும், அப்பொழுதுதான் உயிர் வாழ்க்கையின் உண்மை மகிழ்ச்சியைப் பெறமுடியும். இதயத்தின் புத்தகத் தைப் படிப்பதில் உங்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை என் றால், உங்களுக்கு உதவி கிடைக்கும். இதயம் உங்களிடம் என்ன கூறிக்கொண்டு இருக்கிறது? உலக விஷயங்களுக்கு செவிமடுத்தீர்கள், ஆனால், இதயம் உங்களிடம் என்ன கூறிக் கொண்டு இருக்கிறது என்பதை கேட்காவிடில், தன்னைத்தானே ஒரு பொழுதும் அறிந்துகொள்ளமாட்டீர்கள். உங்கள் உள்ளி லிருந்து வரும் அந்தக் குரலை புரிந்துகொள்ளாவிட்டால், உங் கள் வாழ்வு எப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிஅடையும்? எல்லோரிடமும் நட்புடன் இருந்து, தன்னையே அறிந்துகொள்ளாமல் இருந்தால், வெறும் கையுடன் வந்தீர், வெறும் கையுடன்தான் செல்லவேண்டும் என் பதே ஆகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் இதயம் இருக்கிறது: ஒவ்வொரு இதயத்தினுள்ளும் அந்த ஆனந்தம் நிலைத்திருக்கிறது. ஒரு விஷ யம் இதயத்திலிருந்தும், அனுபவத்திலிருந்தும் வரும் பொழுது தான் தெளிவாக இருக்கிறது. அப்பொழுது அறியாமையின் இருள் விலகுகிறது. ஏனென்றால், இதயத்தின் விஷயத்தால், ஆனந் தத்தின் விஷயத்தால், ஒருவனின் அறியாமை நீங்குகிறது. அதனால், மனிதனின் சந்தேகம் நீங்குகிறது: அவனுடைய கேள்விகள் முடிபடைகின்றன. அப்படி ஒரு பொருள் அதைப் படிப்பதால் கேள்விகள் அதிகமாகின்றன. மற்றொரு பொருள் அப்படி அதை அறிந்துகொள்வதால் கேள்விகள் குறைகின்றன. சிந்தியுங்கள்: உங்கள் வாழ்வில் எதை ஏற்றுக்கொள்ள விரும்பு கிறீர்கள்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை அற்புதம்

மனிதனின் இதயம் அதிசயத்தால் கவரப்படுவது இயல்பானது. மக்கள் அதிசத்தைப் பார்க்க விரும்புகிறார்கள். ஆனால், உண்மை அதிசயம் என்ன என்பது அவர்களுக்குத் தெரியாது. பசு பச்சைப் புல் தின்று வெள்ளைப் பால் கொடுக்கிறது. இதை மக்கள் அதிசயமாக எண்ணுவதில்லை. ஆனால், கல்லிலிருந்து பால் வெளிவந்தால் அது அவசியம்! உங்கள் வீடு செங்கலால் கட் டப்பட்டது, செங்கல்லிலிருந்து பால் சொட்ட ஆரம்பித்தால், தரையிலிருந்தும், சுவர்களிலிருந்தும், கூரையிலிருந்தும் பால் கொட்ட ஆரம்பித்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? கடவுளிடம், ஏ கடவுளே, இது என்ன நடக்கிறது? இந்த அதிசயத்தை வேறு வீட்டில் செய்யுங்கள், என் வீட்டில் வேண்டாம்! என்னால் இங்கு குடியிருக்கக்கூட நனைந்துவிட்டது! கடவுளே, என்ன நடக்கிறது? என்று வேண்டிக்கொள்வீர்கள்.

எது அதிசயம்? அதிசயம் பார்க்கவேண்டுமானால், உங்கள் மூச்சை கவனியுங்கள், அதுவே அதிசயம். இதை முழு உலகத்தின் செல்வத்தால் வாங்கமுடியாது. இந்த மூச்சை புரிந்துகொள்ள முயலுங்கள். உங்கள் வாழ்வை புரிந்துகொள்ள முயலுங்கள், இன்று நான் உயிருடன் இருக்கிறேன் என்றால், அப்படி உயி ருடன் இருப்பதின் உண்மை அர்த்தம் என்ன? இந்த முச்சு என்னுன் வந்தது. திரும்பிச்சென்று என்தின் அர்த்தம் என்ன? அப்படி ஒரு நாள் வரும், என்று இந்த மூச்சிற்காக நான் ஏங்க நேரிடும். வரும், செல்லும், திரும்பிவராது வாழ்க்கையில் இப்படித் தான் நடக்கிறது. மூச்சைவிட முக்கியமானது இவ்வுலகில் வேறு ஒன்றுமே கிடையாது செல்வந்தனோ, யாசகனோ, படித்தவனோ, படிக்காதவனோ, உலகத்தின் எல்லா விஷயங்ளும் இந்த மூச்சு நிற்கையில் நின்றுவிடும். இந்த மூச்சை புரிந்துகொள்ளாவிடில், உண்மையில் கையில் கிரடைத்த வைரமும் நழுவிடுகிறது. இதுதான் உண்மையான அதிசயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக, இந்த உடலை ஒரு வத்திப்பெட்டியாக எண்ணுங்கள், அழிவில்லா மெய்ப்பொருள் இந்த வத்திப்பொட்டிக் குள் வைக்கப்பட்டுள்ளது. எல்லையற்ற பொருள் எல்லையுடைய பொருள்களுக்குள் அடங்கிவிட்டது – அதிக நேரத்திற்கு இல்லை: சிறிது நேரத்திற்குத்தான். இதுவே எல்லாவற்றிலும் சிறந்த அதி சயம் இதைவிட பெரிய அதிசயம் இருக்கவே முடியாது. ஏனென் றால், இது இயற்கையின் விளையாட்டு. இயற்கை என்னவென் றால்–சிறிய பொருள் பெரியதில் கொள்ளாது. வத்திப்பெட்டியில் ஏதாவது வைக்கவேண்டுமானால், அது வைத்திப்பெட்டியைவிட சிறியதாக இருக்கவேண்டியது அவசியம். இதுவோ மாறாக இருக் கிறது எல்லையற்ற பொருள் எல்லையுள்ள பொருளில் கொண் டிருக்கிறது. இந்த அழியும் உடலில் அழிவில்லாத அந்தப் பொருள் வீற்றிருக்கிறது. சிறிது நேரத்திற்காக அதற்குள் ஒரு பொருள் நுழைந்தது: அதன்விளக்கம் இருந்தது, இருக்கிறது, எப்பொழுதும் இருக்கும் அழியும் உடலுக்கு விளக்கம் ஒரு பொழுது இருக்கவில்லை, இப்பொழுது இருக்கிறது. பிறகு இருக்காது இரண்டு மாறான விளக்கம் உள்ள பொருள்களை, ஒன்றாக சேர்த்துவிட்டார் வெளியிலிருந்து ஒன்றுக்கு ஒன்று சேராத அப்படிப்பட்ட தத்துவங்களை வெளியிலிருந்து எடுத்தார்–ஒன்றுக்கு ஒன்று மாறான குணம் உள்ள நெருப்பும், தண்ணீரும் போல, ஒன்று மற்றொன்றை அழிக்கும். தத்துவங்களை ஒன்று சேர்த்து இந்த மனித உடல் படைத்தார்! அதிசயங்களுக்கு ஒன்றும் குறைவு இல்லை, அனுபவிப்பதற்கு எல்லாவற்றிலும் உயர்ந்த கருவி, இந்த உடல. மனிதன் எண்ணங்களினாலேயே துக்கம் அடையக்கூடும்படி அப்படிப்பட்ட அனுபவிக்கும் யந்திரம் இது. மிருகங்களும், பறவைகளும் எண்ணங்களால் அப்பொழுதும் துக்கம் அடைவதில்லை. ஆனால் மனிதன் அப்படி துக்கம் அடைகிறான், எது இப்பொழுது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கவில்லையோ, அதை கற் பனை செய்தே துக்கம் அடைய முடியும். இப்படிப்பட்ட யந்திரம் வேறு எங்கும் கிடைக்காது. பறவை, கூண்டில் அடைக்கப்படா மலேயே துக்கம் அனுபவிக்கும் பறவையைப் போன்றவன், அப் படிப்பட்ட யந்திரம் செய்துள்ளார்! அது ஒரு காரணேமே இல்லா மலேயே சிரிக்கமுடியும்: ஒரு காரணமுமே இல்லாமலேயே அழ முடியும். தன் எண்ணங்களிலேயே! மனிதன் எனும் யந்திரத்தின்ஒவ்வொரு பயிர்களிலும் ஒரேஒரு வேண்டுகோள்தான் அதுவே வாழ்க்கையில் ஆனந்தமும், திருப்தியும் அடைய அந்த இன்பம், நிம்மதி, மகிழ்ச்சி அடைய இந்த மனித உடலினுள், அப்படிப் பட்ட ஒரு பொருள் வைக்கப்பட்டுள்ளது, அது அழியாதது, எல்லா ஜீவராசிகளுக்கும் உயிர், இன்பமானது, ஆனந்தம் கொடுப் பது.

இந்த அதிசயத்தை நீங்கள் அறிய விரும்பினால், உங்கள் உள்ளே, உங்கள் இதயத்தின் பக்கம் கவனம் சேலத்தவேண் டும். இந்த அதிசயம் வெளியே கிடைக்காது இது உங்கள் உள்ளே நடைபெறுகிறது.

இரவு–பகலாக நீங்கள் யாரைத் தேடுகிறீர்களோ, எந்த நண் பனைத் தேடுகிறீர்களோ அந்த நண்பன் உங்களுள் இருக்கி றான் அவன் எல்லோருக்கும் நண்பன். அவனுக்கு ஒருவரிடமும் பகை இல்லை. உங்களுடைய எந்தப் பொருள்தொலைந்து போனாலும், ஒரு பொருள் இருக்கிறது, அதை நீங்கள் தொலைக்க முடியாது. அந்தப் பொருளை அறிந்துகொள்ளுங்கள், ஏனென் றால், அதை அறிந்துகொள்ளாவிட்டால், இந்த வாழ்க்கையை வெற்றியுள்ளதாக்க முடியாது–எவ்வளவு முயன்றாலும் சரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் சுதந்திரமாக இருக்கிறோமா?

அடர்த்தியான காட்டில் சூரியனின் வெளிச்சம் தெரியாது, ஏ னென்றால் மரங்கள் வெளிச்சத்தை தடுத்துவிடுகின்றன ஒரே இருளாக இருக்கிறது. நமது கவலைகளும், எண்ணங்களும் வெளிச்சத்தை தடுக்கும் அந்த மரங்களைப் போல்தான். நாம் அந்த எண்ணங்கள் அல்லது கற்பனைகள் என்ற காட்டிலிருந்து வெளியேறினால், வெளிச்சம் தெரியும். வாழ்க்கை என்ற பயணத் தில் நம் தோளில் சுமக்கும் சுமை கொஞ்சம்–நெஞ்சம் இல்லை. நம் எண்ணங்களினால் படைத்த உலகத்திலிருந்து வெளிவந்து, உண்மையில் ஞானத்தால் பிரகாசம் கிடைக்கும் இடத்திற்கு வரமுடியுமா?

ஒருபறவையை ஒரு சிறிய கூண்டிலிருந்து பெரிய கூண்டிற்கு மாற்றினால், அதற்கு சுதந்திரம் கிடைத்துவிட்டதா? நாம் நம்மையே அறிந்துகொள்ளாதவரை நமக்கு சுதந்திரம் இல்லை. நாம் எல்லோரும் சுதந்திரமாக இருப்பதாக எண்ணுகிறோம். ஆனால் எந்தப் பெருளிடமிருந்து சுதந்திரம்? சுதந்திரம் எங்கே இருக்கிறது? எண்ணங்களால் ஆன சுதந்திரமோ, கற்பனையால் ஆன சுதந்திரமோ இல்லை ஏனென்றால் பரம–சுதந்திரம் எல்லை யற்றது. இந்த வாழ்க்கையை வெற்றியடையச் செய்ய, எல்லோருடைய இதயத்திலும் இருக்கும் அந்த சுதந்திரத் தேவை. அதுவே உண்மை சுதந்திரம். நம்மிடமிருந்து அதை ஒருவரும் பறித்துக்கொள்ள முடியாது.

எது நம்மைப் பிடித்து வைத்திருக்கிறது, எதிலிருந்து சுதந்திரம் வேண்டும்? அரசன் மாறி இருகக்கலாம், ஆனால் பிரச்சினைகள் மாறவில்லை. இப்பொழுதும் மற்றவையில் சிக்கியுள் ளோம். ஏனென்றால் நம்மை எந்தப்பொருள் பிடித்து வைத்திருக் கிறது என்பது தெரியாதவரை சுதந்திரம் எப்படி கிடைக்கும்? அறியாமை உங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை பிடித்துக்கொண்டு இருக்கிறது அறியாமையே உங்களை துன்புறுத்துகிறது. அறியாமையே உங்கள் நிம்தியை கெடுக்கிறது. நமது உண்மை உருவம் இல்லை. நமது வயதுடன் இது மாறுகிறது. சிறிய வயதில் நன்றாக பார்த்த கண்கள், இப்பொழுது அப்படிப் பார்ப்பதில்லை. காதுகளும் அப்படித்தான். நன்றாக கேண்டுக்கொண்டிருந்தவை கொஞ்சம்–கொஞ்சமாக குறையும் ஆனால், உண்மை பொருள் என்ன?

எல்லாவற்றிலும் பெரிய அறியாமை, உங்களுள் வீற்றிருக்கும் பொருளை உங்களால் அடைய முடியாதது. நம்முள் உள்ள தராசின் இரு தட்டுகளில், ஒன்றில் இதயமும், ஆனந்தமும் இருக்கின்றன, மற்றொன்றில் உலகம் முழுவதும் உள்ளது ஒரு பக்கம் உண்மை, மறுபக்கம் பொய், ஒரு பக்கம்ஞானம், மறு பக்கம் அறியாமை, ஒருபக்கம் பரம–சுதந்திரம், மறுபக்கம் மாயை – மோகம் என்ற கூண்டு. ஒருபக்கம் இன்பம் மறுபக்கம் துன் பம், ஒரு பக்கம் கஷ்டங்கள், மற்றொரு பக்கம் பேரின்பம், ஒரு பக்கம் அன்பு மற்றொரு பக்கம் வெறுப்பு, ஒரு பக்கம் உலகத் தின் ஜிவலிப்பு, அது எவ்வளவு பொய்யாக இருந்தாலும் சரி, மனிதனை சிக்கவைக்கிறது. தராசின் மற்றொரு தட்டில் இதயம் மட்டுமே, அதன் மொழி பலருக்குப் புரியாது, அது சொற்கள் இல்லாத மொழி, அதில் ஆனந்தமும், அந்த அருளும் உணர முடியும். இந்த இதயம் உங்களுடைய ஒரு பாகம்தான், தனி அல்ல, இதயத்தியத்தின் குரலும் உங்களைத்தான் அழைக் கிறது. உண்மையில் இந்த வாழ்வுக்குள் அந்த பரமானந்த மும், பேரின்பமும் உடைய தராசுதட்டை கனமுள்ளதாக செய்ய முடியுமா? என்று நீங்கள் இதயத்தின் குரலை செவிமடுக்க ஆரும்பிக்கிறீர்களோ, அன்று சுதந்திரம் என்ன என்பது தெரியும் அப்பொழுது வாழ்க்கையில் உண்மை ஆனந்தம் கிடைக்கும்

அது அப்படிப்பட்ட சுத்திரம், அதை ஒருவரும் பறிக்கமுடியாது. அந்த சாந்தி, எவ்வளவு பயங்கரமான யுத்தம் இருந்தாலும் பாதிக்கப்படாதது. எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும், இந்த உல கில் ஒருவராலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாக்க முடியாத அப்படிப்பட்ட சத்தியம். அந்த சத்தியத்தை அறிந்து வாழுங்கள். எந்த நிலைமையிலும் அந்த சாந்தியை அனுபவித்திக்கொண்டு வாழுங்கள். சூரியன் தினந்தோறும் உதயமாகிறது, ஆனால், உங்கள் வாழ்க்கை யில் நம்பிக்கை கிரணங்கள் வரும்படி, உங்கள் முற்றத்தில் சூரியோதயம் எப்பொழுது ஏற்படும்?

ஒரு பிரசித்திப்பெற்ற எழுத்தாளர் எழுதியுள்ளார்—நான் சிறிய வனாக இருந்தபொழுது, சில வருஷங்கள் என் தாய்—தந்தையார் கூறியதையே செய்தேன். சிறிது வளர்ந்தும் என் நண்பர்கள் கூறியதையே செய்தேன். சிறிது வளர்ந்ததும் என் நண்பர்கள் கூறியதே செய்தேன் மேலும் சிறிது வளர்ந்ததும் சமுகம் கூறி யதையே செய்தேன். இப்பொழுது நான் வயோதிகம் அடைந் ததும் என் முழுகாலமும் கழிந்த பிறகு நான் எதைச்செய்ய விரும்புகிறேனோ எது என் இதயத்தின் விஷயமோ அமையே செய்யவேண்டும் என்று புரிந்துகொண்டேன்.

உண்மையில் நாம் இந்த உலகில் சிறிது சம்பாதிக்கவே வந்தோம் ஆனால் கனவுகளில் நம்மை இழந்துவிட்டோம். கனவுகளை உண்மையென்று எண்ணத்தொடங்கி இதயத்திற்குள் ஒளித்திருக்கும் மெய்ப்பொருளை மறந்துவிட்டோம் நாம் கூறுவது— ஏன் கணவு காண்கிறீர்கள்? கண்களைத்திறவுங்கள் நீங்கள் உயிருடன் இருப்பது கணவு இல்லை. உங்களுக்கு இந்த இதயம் இருப்பது கனவு இல்லை. இதை யேற்றுக்கொள்ளுங்கள் ஏன் கனவுகளில் சிக்குகிறீர்கள்? நாம் வருங்காலத்தில் சிந்தனை யில் ஈடுபடுகிறோம் வரும்காலம் மாறினாலும் அந்த வருங்காலம் எங்கு இருக்கிறது.? இந்த உடல் எங்கு இருக்கிறது. இந்த மூச்சு எங்கே செயல்படுகிறது.? அது வருங்காலத்திலோ சென்ற காலத்திலோ இல்லை. இந்த நிகழும் காலத்தில் நடைபெறு கிறது. வருங்காலம் ஒருவருக்கும் தெரியாது. இந்த மூச்சு வருமா வராதா என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்குத் தெரியும்? வாழ்க்கையில் உண்மை சுதந்திரத்தை அறியுங்கள் இதயம் என்ற பறவை அந்த முடி பில்லா ஆகயத்தில் பறக்க விரும்புகிறது. அது வாழ்க்கை முழுவதும் அந்த சுதந்திரத்தை அனுபவிக்க விரும்புகிறது. ஒரு நொடியோ இரண்டு நொடியோ மட்டும் இல்லை. அங்கு என்னங்கள் கிடையாது துக்கம் வலி கஷ்ரம் இல்லை காலம் நேரம் போன்ற விலங்குகள் கிடையாது நீங்கள் அந்த இதயத் தின் குரலை கேட்காவிடின் உங்கள் வாழ்க்கை வெறுமையாகிவிடும். இதுவே வாய்ப்பு இது தான் நேரம் என்பதை சிந் திக்கிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை என்ற விளக்கு

இன்பமும், துன்பமும் வாழ்க்கையின் இரண்டு பக்கங்கள். இன்பத்தில் மனிதன் அதன் லாபம் கிடைக்கட்டும் என்று முயற்சிக்கிறான். துக்கத் தில் அதிலிருந்து இப்பொழுது வெளியேறுவோம் என்று எண்ணுகிறான். நல்லது–கெட்டது எல்லோரும் அறிவார்கள்; நல்லது கெட்டதுக்கு அப்பாற் பட்ட ஒரு மெய் இருக்கிறது. அந்த மெய் நம் எல்லோருடைய இயத்தி லும் இருக்கிறது; ஆனால், நாம் அதை அறியவில்லை, கஷ்டங்களிலும், பிரச்சினைகளிலும் சிக்கி, நமக்கு என்ன கிடைத்தது, என்ன தொலைந் தது என்று வாழ்க்கையின் தராசில் எடை போடுகிறோம்.

வாழ்க்கை என்றால் பிரச்சினைகளும் இருக்கும். மனிதன் இந்த பிரச்சி னைகளிலிருந்து தப்பமுடியாது. உண்மையில், மனிதன் தனக்குத் தானே நரகம் செய்துகொள்கிறான். பிரச்சினைகளும் நாம் ஏற்படுத்தியவைதான் உதாரணமாக ஒரு ரயில் – விபத்து நடக்கிறது. இது எதனுடைய பலன்? லயன்மன் தப்பாக ஸிக்னல் கொடுத்தனால் இரண்டு ரயில்கள் மோதிக் கொண்டன, என்பதை மக்கள் புரிந்து கொள்வதில்லை. இது விதியின் பலன் என்று மக்கள் கூறுகிறார்கள். யாரோ பஸ்ஸின் கீழே அரைபட்டு விட்டான். அவன் எங்கு செல்லக் கூடாதோ அங்கு சென்றுவிட்டான், என்று இல்லை. அப்படி இல்லை! இதுவும் விதியின் செயல் என்கிறார்கள்!

ஒருவன் நம்பிக்கை இழப்பதற்கு ஒரு விசேஷமான நிலைமை வேண்டும் என்பது இல்லை. அவன் எப்பொழுது வேண்டுமானாலும் இழக்கலாம். அவன் ஏழையிலும் ஏழையோ, செல்வந்தனுள் செல்வந்தனோ, பிரச்சி னைகளின் சுமை எல்லோருக்கும் சமமே! பிரச்சினைகளின் சுமையில் ஒரு வேறுபாடும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமய ஐந்து செல்வந்தர்களைப் பற்றிய ஒரு சம்பவம் நடைபெற்றது. அவர்கள் ஏதோ தப்பு செய்திருந்தார்கள். அவர்கள் தங்கள் விஷயம் வெளியே தெரிந்துவிடும் என்று நினைத்தார்கள். ஒரு ஹோட்டலுக்குச் சென்று நிறைய சாராயம் குடித்துவிட்டு, தன்–தன் அறைக்களுக்குச் சென்று, தற்கொலை செய்துகொண்டுவிட்டார்கள். பலமுறை கேட்கி றோம் – ஒரு பெண் யாரையோ காதலிக்கிறது; ஆனால், திருமணமோ வேறு ஒருவனுடன் நடக்கிறது. அவளும் தற்கொலை செய்துகொள்கிறாள். அந்த ஐந்து நபர்களில் ஒருவரிடம், இந்தப் பெண் ணின் சுமை உங்கள் சுமையைவிட குறைந்ததா? ஏனென்றால், நீங்கள் பிடிப்பட்டால் சிறைச்சாலை செல்ல நேரிடும், என்று வெட்கமாக இருந்தது. இவளோ சிறைச்சாலை சென்றிருக்கமாட்டாள்? என்று கேட்டால்? அந்த இரண்டுக்கும் என்ன வித்தியாசம்? ஒரு மாணவன் சர்வகாலசாலையில் தற்கொலை செய்துகொள்கிறான். அந்தப் பெண்ணிடம், இவன் சுமை உன் சுமையைவிட குறைவா, என்ன? அவன் மறுமுறை படித்திருக்கலாம். வேறு வழியில் யோசனை செய்திருக்கும் உன் விஷயத்திலோ வாழ்க்கை வீணாகிறது. இவனுக்கோ அப்படி ஒன்றுமே இல்லை. என்று கேட்டால்? ஆனால், அந்த மூவரின் சுமை வெவ்வேறா? மூன்று பேருக்கும் சுமை ஒரே மாதிரிதான். இந்த முழு உலகத்தின் விஷ யங்கள் எல்லோரக்கும் ஒரே மாதிரிதான். புதிய வர்ணம் அல்லது உரு வத்தில் வருகிறது. ஆனால், பிரச்சினைகளின் செம்மட்டி எல்லோரையும் காயப்படுத்துகிறது.

காரணம் தெளிவானது–மக்கள் தன் தோள்களில் ஒவ்வொரு விஷயத் தின் சுமையையும் ஏற்றிக்கொள்வது. வாழ்க்கையில் அவநம்பிக்கைக்கு இடம் கொடுக்கக்கூடாது. அவநம்பிக்கை இருந்தால், நம்பிக்கையும் இருக் கிறது அல்லவா? நாளை சூரியன் திரும்பவும் உதிக்கும் என்று நம்பிக்கை இருக்கிறது. எப்படி சூரியன் உதித்து, அஸ்தமித்து, பகல் முடிந்து, இரவு வருகிறதோ, அதே மாதிரி நானும் சூரியனுடன் எழுந்து என் நம்பிக்கை களை காண்பேன், என் ஆனந்தத்தை அனுகவிப்பேன். இது ஒரு புதிய காலை, புதிய தினம், நான் நம்பிக்கையால் நிரம்பி இருக்கவேண்டும். நேற்று நான் செய்ததெல்லாம், இன்று எனக்கு மாறக்கூடும். நான், என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் என் உண்மை நம்பிக்கைகளை அடையவேண்டும். படைத்தவர் நமக்கு இந்த உடல் கொடுத்துள்ளார், இந்த மூச்சு கொடுத் துள்ளார், என்ற விஷயம் மற்றிலும் தெளிவானது, இந்த விஷயத்தை நம்ப முடிகிறதா? உண்மை என்னவென்றால், நாம் மற்ற விஷயங்களில் ஈடு பட்டுவிடுகிறோம், உலகத்தின் சுழலில் சிக்கிவிடுகிறோம். அந்த மாவு இயந்திரத்தில் அரைபட்டுக்கொண்டு இருக்கிறோம். பிறவிக்கடலின் இந்த நதி மகவும் ஆழமானது. வெள்ளம் மிகவும் வேகமாக; நீங்கள் எங்கெல் லாம் சிக்கியுள்ளீர்கள்! நீங்கள் சிக்கி இருப்பது கொஞ்ச–நஞ்சம் இல்லை.

மக்கள், தன் உத்தியோகம், குடும்பம், பொறுப்பு, இவைகளே தமது வாழ்வு என்று எண்ணுகிறார்கள். ஆனால் இவை வாழ்க்கை இல்லை. இந்த வாழ்க் கைக்கு கடிகாரம் அல்லது சங்கிலியின் கண்ணி இருக்கிறது. என்றால், அது இந்த உள்ளே வரும் ஒரு மூச்சின், வெளியே செல்லும் ஒரு மூச்சும் தான், என்று இந்த மூச்சின் வந்து–செல்வது நிற்குமோ, அன்று உங்கள் மானம்–மரியாதை, உங்கள் உறவுகள், உங்கள் உத்தியோகம், உங்கள் எண்ணும் மற்ற எல்'லா பொருள்கள், இவை எலலாமே முடிந்துவிடும்.

வாழ்க்கையின் லட்சியம் ஏதாவது இருக்கவேண்டுமானால், எந்தப் பொருள் இல்லாவிடில் நான் ஒன்றுமே இல்லையோ, எந்தப் பொருள் இருப்பதனால் எனக்கு எல்லாமே உள்ளதோ, அந்தப் பொருளை அறிந்து கொள்ளவேண்டும், என்பது லட்சியமாக இருக்கவேண்டும், அல்வா? நான் அந்தப் பொருளையே அறியாவிட்டால், வாழ்க்கை குறைவுள்ளதாகும். ஏனென்றால், எல்லாருமே இந்த உலகை விட்டு செல்லவேண்டும். இப் பொழுது செல்வோம் என்பது ஒருவருக்கும் தெரியாது. இது நல்ல விஷ யம். நான் ஒரு நாள் செல்லத்தான் வேண்டும், என்று நம் வாழ்க்கையின் ஒரு நாளில் எவ்வளவு முறை நம்மிடமே கூறிக்கொர்கிறோம்? எவ் வளவோ வாரங்கள், எவ்வளவோ மாதங்கள் கழிகின்றன. குறைந்தபட் சம் சிறிது நல்லத செய்துவிட்டுச் செல்லுங்கள். இது உங்கள் வாழ்வு. உங் கள் வாழ்கையில் அந்த நம்பிக்கையின் விளக்கை எப்பொழுதும் எரிந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது விஞ்ஞானப்பீட 1ம் வருடமாணவ பிரதிநிதியின்

**ஜெயபிரதாப்** அவர்களின் தந்தை

## அமரர் செல்லத்துரை தர்மபாலன்

30.03.2011 அன்று அமரத்துவம் அடைந்து விட்டார்

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1 ம் வருட விஞ்ஞானப்பீட மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட 1ம் வருட மாணவன் த.ஜெயப்பிரதாப்பின் தந்தையார்

## செல்லத்துரை தர்மபாலன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விஞ்ஞானபீடம்
36ஆம் அணி (1ம் வருடம்)
யாழ்.பல்கலைக்கழகம்.

(4289)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

செருக்கப்புலம் வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகக்
கொண்டவரும் எமது விளையாட்டுக் கழக
உறுப்பினர் த.ஜெயப்பிரதாப் அவர்களின்
பாசமிகு தந்தையாருமாகிய



மண்ணில்
05.10.1948

விண்ணில்
30.03.2011

அமரர்

## செல்லத்துரை தர்மபாலன்

அவர்கள்

கண்கள் பல உமைத்தேட
காணாமல் காலனுடன் சென்றதேனோ
கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன் முகமும்
மறைந்ததேனோ
கண்களெல்லாம் கடலாய் பொங்க
கலங்க விட்டு எங்கு சென்றீர்
அமைதியாய் மரணத் திரையில்
மௌனமாய் மறைந்ததேனோ

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

பிரிவால் துயருறும்
கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழக சமூகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
05 - 10 - 1948



உதிர்வு
30 - 03 - 2011

பாசம் நிறைந்த மனைவியோடு
பண்பான பிள்ளைகளைப் பெற்றெடுத்து
பாதுகாவலனாக இருந்து அவர்களையெல்லாம்
வளமாக வாழவைத்து - அவர்களை
பரிதவிக்க விட்டுச் சென்றதேனோ
பார் ஐயா உன் பக்கத்தில்
மனைவி, மக்கள், உறவுகள்
பாசத்தோடு பதறி அழுவதை
கண்காணா தேசத்தில் நாமிருந்து
கதறி அழுகின்றோம்
உம் திருமுகத்தைப் பார்க்கமுடியாத
நிலையை எண்ணி பனியாக உருகுகின்றோம்
ஒருமுறை கூட பார்க்கமாட்டீர்களா?
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் திரு உருவம்
இனி உங்களை எங்கே காண்போம்?....
பாரீர் பரிதவிக்கும் உம் மனைவி,
பிள்ளைகள், உறவுகள் அவர்களோடு....

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும்
கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

## செல்லத்துரை தர்மபாலன்

பிரிவால் துயருறும்
**தனபாலசிங்கம் குடும்பத்தினர்**
(கொலண்ட்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
05.10.1948

விண்ணில்
30.03.2011

# செல்லத்துரை தர்மபாலன்

[விஞ்ஞானபீட 1ம் வருடமாணவன் ஜெயப்பிரதாபின் தந்தை]

அன்புடனும் பண்புடனும் பூவுலகில்

வாழ்ந்து நேசத்துடனும் பாசத்துடனும்

எம்மோடு பழகி இன்சொல் பேசி எல்லோருக்கும்

இன்முகம் காட்டி சுற்றத்தவருடன் அன்பும்

ஆதரவும் கொண்டு என்றும் நல்லவராய் எல்லோருக்கும்

உதவி செய்யும் உத்தம குணத்துடன் வாழ்ந்தவரே!

இன்று உங்கள் பிரிவு எம்மை வாட்டுகிறதே

இதயமலரால் அஞ்சலி செய்து பிரார்த்திக்கின்றோம்.

உன் தந்தையின் பிரிவால் துயருறும் சக நண்பர்கள்

[யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட 1ம் வருடமாணவர்கள்] 03.04.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



மலர்வு 1948 - 10 - 05

உதிர்வு 2011 - 03 - 30

செருக்கப்புலம் வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாக கொண்டவரும்
எமது கல்வி நிறுவனத்தின் பழைய மாணவன் த.ஜெயப்பிரதாப்
அவர்களின் தந்தையாருமாகிய

## அமரர்

# செல்லத்துரை தர்மபாலன்

அவர்கள்

**அன்பினால் உலகை ஆண்டீர்!**
**உங்கள் பண்பினால் உயர்ந்து நின்றீர்!**
**முயற்சியில் முன்னணி வகித்தீர்!**
**உலகினில் உங்கள் புகழ் நிலைத்து நிற்கும்!**
**உங்கள் பிரிவினால் வாடி நிற்கின்றோம்**
**கண்ணீரைக் காணிக்கை ஆக்குகின்றோம்.**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தியருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
நாமும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

02.04.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

நேசித்த நெஞ்சமெல்லாம்
நிறைதுயருக் கானதுவோ!
இன்முறுவல் காட்டி இனிமையாய்ப் பேசும்
புன்னகைப் பூக்கள் உதிர்ந்தனவோ !
நெஞ்சம் கனக்குதய்யா !
கண்ணீர் நல்குதய்யா!
வஞ்சித்த காலனவன்
வானுலகுக் கழைத்தானோ
நம்ப முடியவில்லை
நடந்த நிகழ்வறிந்தவுடன்
பண்பான உன் வார்த்தை
என்று நாம் இனிக் கேட்போம்.

2ஆம் வருட மாணவர்கள்,
விஞ்ஞான பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்

மலர்வு
05
10
1948



உதிர்வு
30
03
2011

எமது பீடத்தின் முதலாம் வருட மாணவன் ஜெயப்பிரதாப்பின்
பாசமிகு தந்தை

அமரர்


## செல்லத்துரை தர்மபாலன்

Harikanan, Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கைகள்...



தாயின் மடியில்
05 ◈ 10 ◈ 1948

இறைவன் அடியில்
30 ◈ 03 ◈ 2011

செருக்கம்புல லேன், நந்தாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்

## செல்லத்துரை தர்மபாலா

நேசித்த நெஞ்சமெல்லாம்
நிறைதுயருக்கானதுவோ!
இன்முறுவல் காட்டி இனிமையாய்ப் பேசும்
புன்னகைப் பூக்கள் உதிர்ந்தனவோ !
நெஞ்சம் கனக்குதையா !
கண்ணீர் நல்குதையா!
வஞ்சித்த காலனவன்
வானுலகுக்கழைத்தானோ ?
நம்ப முடியவில்லை
நடந்த நிகழ்வறிந்தவுடன்
பண்பான உன் வார்த்தை
என்று நாம் இனிக் கேட்போம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு, ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, உங்கள் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

தவரூபன்
[ரூபன்]

01.04.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கைகள்

ன்னை மடியில்
)5.10.1948



ஆண்டவன்
30.03.:

# அமரர் செல்லத்துரை தர்மபாலன்

எமது கழக உறுப்பினர் த.ஜெயப்பிரதாப் அவர்களின் பாசமிகு தந்தை
அமரர் செல்லத்துரை தர்மபாலன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

.2011

பிரிவால் துயரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

- ✦ செல்லத்துரை + தனலட்சமி ✦
  - தங்கரத்தினம் + கணேசானந்தன் ✦
    - தர்மபாலன்
    - தேவராசா + கமலாதேவி
    - கலாநிதி + ஜெயசேனன்
    - தனபாலன் + கலாநிதி
    - கமலாம்பிகை + இராசதுரை
    - ✦ விக்னேஸ்வரன்
- ✦ துரைச்சாமி + கனகமணி
  - மனோன்மணி
  - சிவகுமார்
  - சகுந்தலாதேவி + மகேந்திரன்
  - சிவராசா + பிரேமா
  - சிவபாலன் + செல்வி
  - சிவலிங்கம் + ராசி

தர்மபாலன் – மனோன்மணி:
- கல்பனா + சிவகுமார்
  - சாதனா
- மதுமதி
- ஜெயபிரதாப்

✦ அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்திலிருந்து....



பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் வாழ்வின் வழி காட்டியாக திகழ்ந்து விழி மூடி இன்று இறைபதம் எய்திய எங்கள் குடும் பத்தலைவர் அமரர் செல்லத்துரை தர்மபாலன் அவர்கள் மறைவுற்ற செய்தி அறிந்து நேரில்வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உள்நாட்டு வெளிநாடுகளிலும் இருந்து தொலைபேசியூடாக எம் துயரில் பங்கெடுத்த அனைத்து உள்ளங்களுக்கும் மற்றும் மலர் வளையம் சாத்தியவர்களுக் கும் அஞ்சலி பிரசுரம் செலுத்தியவர்களுக்கும் இறுதிக் கிரியைகள், அந் தியேட்டி, சபீண்டீகரணம் முதலிய அனைத்து கிரியையிலும் கலந்து ஆத்ம சாந்திக்காய் பிரார்த்தித்தவர்களுக்கும் தேவையான போதெல்லாம் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவர்களும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்

**" என் நன்றி கொண்டார்கும் உய்வுண்டாம்**
**உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு"**

**– குடும்பத்தினர்.**

ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ் – கே.கே.எஸ் றோட் – கோண்டாவில். T.P.077 2209474
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்



தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும் தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்.
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை
செய்கின்றான்.
நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கின்றான்.
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்கு போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி.

"நன்னெறியே இறைவணக்கம்"

– சுவாமி விவேகானந்தர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ் - கே.கே.எஸ் வீதி, கோண்டாவில். T.P: 077 2209474.